# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :272 ஆவணி 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 28 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


## ஆவா என்ற சந்தேகத்தில் அறுவர் பொலிஸ் பிடியில்

யாழ்ப்பாணம், ஓக.28
ஆவா எனப்படும் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் நேற்று வியாழக் கிழமை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மானிப்பாய், 15



## வெடி கொளுத்திய மாணவர்கள்!

யாழ்ப்பாணம், ஓக.28
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக் கழக வளாகத்தில் வெடி கொழுத்தியும், கேக் வெட்டியும் 15

## யாழ். பல்கலை. துணைவேந்தராக சிறிசற்குணராஜா தெரிவு!



யாழ்ப்பாணம், ஓக.28
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகக் கணிதப் புள்ளிவிவரவியல் துறையின் மூத்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகச் சட்டத்துக்கமைவாக, ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின்படி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ 15

## காணி சுவீகரிப்பைத் தடுக்க ஒன்றுகூடுமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக.28
மண்டைதீவில் பொதுமக்களுக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணிகளை கையகப்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதைத் தடுத்து நிறுத்த இன்று மக்கள் மண்டைதீவு முகப்பு 15

# போர்க் குற்றங்கள் நடக்கவேயில்லை!

## நாடாளுமன்றில் கதைகளை அவிழ்த்து விட்டார் வீரசேகர



கொழும்பு, ஓகஸ்ட்28
எமது இராணுவம் போர்க்குற்றங்களைச் செய்துள்ளது என்று கூறுகின்றனர். போர்க்குற்றங்கள் தொடர்பான 6 விசேட நிபுணர்கள் எந்தவிதமான போர்க்குற்றங்களும் இங்கு இடம் பெறவில்லை என்று தெரிவித்துள்ளனர்.
இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். 11

### முச்சந்தி முரளி



"அதெல்லாம் சரி, கும்பலா கோயிலுக்கு போனா வராத கொரோனா காவடி எடுத்தா மட்டும் வருமோ?"

## தவறான முடிவெடுத்து ஒருவர் உயிரிழப்பு

மன்னார், ஓக.28
மன்னாரில் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. 15

## நேர்த்திக் கடன் நிறைவேற்ற சந்நிதியில் இம்முறை தடை!



யாழ்ப்பாணம், ஓக.28
வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் திருவிழா நடைபெற்றுவ 15

## விக்கியின் உரையால் நேற்றும் களேபரம்!

கொழும்பு, ஓக.28
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரனின் நாடாளுமன்ற உரை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்றும் சர்ச்சைகள் கிளப்பப்பட்டன. 15

## கூட்டமைப்பு பேச்சாளர்; இன்னமும் முடிவில்லை

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறுகின்றார்

கொழும்பு, ஓக.28
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் தொடர்பில் இன்னமும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். 15

## கவச எதிர்ப்பு கண்ணிவெடி நுணாவிலில்!



கொடிகாமம், ஓக.28
கவச வாகனங்களைத் தகர்க்கும் கவச எதிர்ப்பு நிலக்கண்ணிவெடி ஒன்று சாவகச்சேரி, நுணா 15

## தமிழரசுக் கட்சி செயலாளர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

### சி.வீ.கே. உட்பட ஐவர் இணைந்து சமர்ப்பிப்பர்

யாழ்ப்பாணம், ஓக.28
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கட்சியின் நாளை நடக்கவுள்ள கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கொண்டுவரப்படவுள்ளது.
"கடந்த நாடாளுமன்றத் 12

## தேன் எடுக்கச் சென்றவர் கரடி தாக்கி உயிரிழப்பு

வவுனியா, ஓக.28
விளாத்திக்குளம் காட்டுப் பகுதிக்குத் தேன் எடுக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
விளாத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த சிறிரங்கன் வியேந்திரன் (வயது36) என்ற 15




# தமிழருக்கு தீர்வுவழங்க 2/3 பயன்படுத்துங்கள்!

## நாடாளுமன்றில் சாள்ஸ் எம்.பி. வலியுறுத்து

**கொழும்பு, ஓக. 28**

**'ஒரே கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி, பிரதமருடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனான அரசு தற்போது ஆட்சியைப் பிடித்திருக்கின்றது. தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்குவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று முற்பகல் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஒற்றையாட்சி முறைமையில் தமிழர்கள் அழிக்கப்பட்டதுதான் வரலாறு. எனவே, ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு தமிழ் மக்களுடைய நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கக்கூடிய வகையில் அரசமைப்பு மாற்றம் இடம்பெற வேண்டும் என்று இந்தத் தீவில் அழிந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தத் தீவில் தமிழர்கள் தனி நாடாக, தனி இராஜ்ஜியமாக, தமிழ் மன்னர்களுடைய ஆட்சியில்தான் வாழ்ந்து வந்தார்கள். 1500ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு வெளிநாட்டவர்களின் வருகைக்குப் பின்னர்தான் 1815இல் தமிழர்களுடைய இராஜ்ஜியமும் சிங்களவர்களுடைய இராஜ்ஜியமும் ஒன்றாக்கப்பட்டு சிலோனாக மாறியது. அன்றிலிருந்து தமிழர்கள் இந்தத் தீவில் சிறுபான்மை இனமாக மாற்றப்பட்டார்கள்.

தமிழர்களைச் சிங்கள ஆட்சியாளர்கள் அடக்கி ஆள நினைப்பதும் தமிழர்கள் அதற்கு எதிராகப் போராடுவதும் வரலாறு. இந்தத் தீவில் தமிழர்கள்தான் பூர்வீகக் குடிகள். அதற்கு வரலாற்று ஆவணங்களும் உள்ளன. நாங்கள் சிங்கள மக்களை ஆட்சிபுரிய நினைக்கவில்லை. தமிழர்களுடைய நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்கள மயமாக்கப்படுவதும், தமிழர்களுடைய கலாசாரங்கள் அழிக்கப்பட்டு சிங்கள பௌத்த மயப்படுத்தப்படுவதும் இந்த ஒற்றையாட்சி முறைமையில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

ஒற்றையாட்சி முறைமையை வலுப்படுத்துவதற்காகவே மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள் என்று ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் கூறியிருந்தார். அதேவேளை, பிரதமர் இரண்டு தினங்களுக்கு முன்னர் தனிநபருக்காக அன்றி சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பு மாற்றம் ஒன்று நடைபெற வேண்டும் என்று கூறியிருந்தார். ஒரு மையத்திலிருந்து பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவை நாடு பூராகவும் நடைமுறைப்படுத்துவதுதான் ஒற்றையாட்சி முறைமை.

ஒற்றையாட்சி முறைமையில் தமிழர்கள் அழிக்கப்பட்டதுதான் வரலாறு. எனவே, ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு தமிழ் மக்களுடைய நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கக்கூடிய வகையில் அரசமைப்பு மாற்றம் இடம்பெற வேண்டும் என்று நாட்டினுடைய ஜனாதிபதியையும், பிரதமரையும், இந்த அரசின் கட்சித் தலைவர்களையும், அமைச்சர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் குறிப்பாக சிங்கள மக்களையும் இந்தத் தீவில் அழிந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த உலகத்தில் பல நாடுகள், பல மொழிகள் பேசுகின்ற மக்கள் சமமாக வாழக்கூடிய வகையில் அரசமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த நாடுகளே அபிவிருத்தியடைந்த நாடுகளாக இருக்கின்றன' என்றார். (த22)

## எனது அனுமதியின்றி விசாரிக்க முடியாது!

### சபாநாயகர் சபையில் அறிவிப்பு



கொழும்பு, ஓக. 28

எமது அனுமதியின்றி கோப் குழுவின் தலைவரை அல்லது உறுப்பினர்களை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு அழைக்க முடியாது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் 27/2 கீழ் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே சபாநாயகர் இவ்வாறு கூறினார்.

'கோப் குழுவின் தலைவராகவிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்திக்கு கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பல்கலைக்கழகம் தொடர்பில் தமக்குத் தெரிந்த விடங்களைச் சமர்ப்பிக்குமாறு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற சிறப்புரிமைகளின் பிரகாரம் கோப் குழுவின் தலைவராக இருந்த ஒருவரை நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விசாரணைகளுக்காக அழைக்க முடியுமா? என அவர் கேள்வியெழுப்பிருந்தார். இதற்குப் பதிலளித்த சபாநாயகர், 'முடியாது. இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்' என்றார். (கு-44)

## அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றியவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 28

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற உழவியந்திரச் சாரதி கைதுசெய்யப்பட்டு அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார்.

காங்கேசன்துறை சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் குறித்த சாரதியைக் கைது செய்தனர். உழவு இயந்திரமும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டது. வயாவிளான் ஊடாக மணல் கடத்தியபோதே அவர் கைதுசெய்யப்பட்டார் என்றுதெரிவிக்கப்படுகின்றது. (ம25)

## மாணவர்களுக்கான சுயகற்றல் கையேடு

கரணவாய், ஓக. 28

வடமராட்சி வலய உடற்கல்வி பிரிவினரால் தரம் 10 மாணவர்களுக்கான சுயகற்றல் கையேடு நேற்று வெளியிடப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இழந்த கல்வியை மீளப் பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.செல்வக் குமரனின் வழிகாட்டலில் வலய உடற்கல்வி ஆசிரியர் குழாமால் இந்த சுயகற்றல் கையேடு தயாரிக்கப்பட்டது.

உதவிக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் பருத்தித்துறை கோட்ட கேட்போர் கூடத்தில் இந்த வெளியீடு இடம்பெற்றது. முதல் பிரதியை பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.நவநீதமணி வெளியீட்டு வைத்தார். இதில் வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த உடற் கல்வி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ம-108)

# உண்மை எப்போதும் கசக்கவே செய்யும்!!

## விக்னேஸ்வரன் கூட்டணி அறிக்கை

கொழும்பு, ஓக. 28

தமிழினத்தின் அடையாளங்களை அழித்து, பூர்வீக நிலங்களை கையகப்படுத்தி பௌத்த, சிங்கள சித்தாந்தத்தை நிறுவுவதற்கு முயற்சித்து வருகின்ற ஆட்சியாளர்களுக்கு, தமிழர்களும் தமிழும் அதன் பூர்வீகமும், தொன்மையானது என்ற உண்மையைக் கூறுகின்றபோது அது கசக்கவே செய்யும் இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக்கூட்டணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப நாளன்று சபாநாயகருக்கான கட்சித்தலைவர்கள் வாழ்த்துரையின்போது தமிழ் மக்கள் பூர்விக குடிகள், தமிழ்மொழி தொன்மையானது என்ற உண்மையை யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் வெளிப்படுத்தியிருந்தார். அதற்கே தென்னிலங்கை கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இதுப்பற்றி ஆனந்தன் விடுத்த ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது: அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மொழியானது உலகத்தில் உள்ள மிகத் தொன்மையான மொழிகளில் ஒன்றாகும். தமிழ் மொழி பழம்பெரும் மொழி என்பதற்கு ஆயிரமாயிரம் சான்றாதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றை மகாவம்சம், சூலவம்சம் போன்ற வரலாற்று நூல்களை பயன்படுத்தி முழுமையான திரிவுபடுத்தல்களை பேரினவாதச் சிங்களவர்கள் மேற்கொண்டுள்ளனர். தற்போதும்கூட, தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு கிழக்கின் வரலாற்றை மாற்றுவதற்கான திட்டமிடல்களே முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழர்களை வந்தேறு குடிகளாகச் சித்தரித்து இலங்கையை முழுமையான சிங்கள, பௌத்த நாடாக அறிவிப்பதே பேரனிவாதிகளின் நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றது. அதன் ஓர் அங்கமாகவே, கிழக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் ஜனாதிபதி செயலணி அதற்கு முழுமையான ஆதாரமாக அமைகின்றது.

அதேவேளையில், பொதுத்தேர்தல் நிறைவடைந்தவுடன் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை தேவை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறைகூவல் விடுத்தது. ஆனால், தமிழரின் இருப்புத் தொடர்பான கூற்றால் தனி நபரை இலக்கு வைத்து தென்னிலங்கைத் தரப்புக்கள் தாக்குதல் நடத்த ஆரம்பித்திருக்கின்ற நிலையில் மௌனமாக இருந்து கொண்டிருக்கின்றது. இதன்மூலம் ஒற்றுமைக்கான அழைப்பின் பின்னணி சுயலாப அரசியல் என்பதும், தமிழினத்தின் இருப்பை அழிக்கும் வரலாற்று தொன்மை மாற்றப்படுவதில் கரிசனையே இல்லை என்பதும் அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கின்றது. என்றுள்ளது. (கு-18,110)

# அரசுடன் இணையுங்கள்

## கணக்கறிக்கை சமர்ப்பித்து பிரதமர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 28

'நல்ல சுபீட்சத்தின் நோக்கு' என்கின்ற வேலைத்திட்டத்தை யதார்த்தமாக்குவதற்கு இந்த அரசுடன் ஒன்றிணையுமாறு பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இடைக்கால கணக்கறிக்கையை நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தனது உரையில், கடந்த பெப்ரவரி மாதத்தில் கடன்களைச் செலுத்துவதற்கு அனுமதி கோரியிருந்தேன். ஆனால் எதிர்க்கட்சி அதற்கு இடையூறு செய்ததால் தாமதம் ஏற்பட்டது.

2020ஆம் ஆண்டு செப்ரெம்பரிலிருந்து டிசெம்பர் வரையான நான்கு மாதங்களுக்கு அரச செலவுகளைச் செய்வதற்கு ஆயிரத்து 900 பில்லியன் ரூபா ஒதுக்குவதற்கும் அதற்காக ஆயிரத்து 300 பில்லியன் கடன் எல்லையை அங்கீகரிப்பதற்காகவும்தான் இந்த குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த எல்லா குறைநிரப்பு பிரேரணையும் 2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டத்தின்மூலம் எதிர்காலத்தில் சமர்ப்பிப்போம்.

2019ஆம் ஆண்டு செலுத்தப்படாத பட்டியலைச் செலுத்துவதற்கு பெருமளவு தொகை தேவைப்படுகின்றது. இதன்படி அரசின் செலவு ஓரளவுக்கு முகா மைத்துவம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் எமது வெளிநாட்டு கையிருப்புக்கள் தேவையில்லாத பொருள்களை இறக்குமதி செய்வதற்குத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த பின்னணியில் எமது செலாவணி விழுக்காடு தேவையற்ற விதத்திலே ஏற்ற இறக்கம் கண்டன. இதன் விளைவை இன்று நாம் பார்க்கின்றோம். எவ்வாறாயினும், செலாவணி விழுக்காடை உறுதியான மட்டத்திலே பேணுவதற்கு எங்களால் முடிந்திருக்கின்றது. எமது உள்நாட்டுதொழில் முனைவோர்கள் கைத்தொழிலாளர்கள் என்று எல்லோரையும் வலுவூட்ட வேண்டியிருக்கின்றது. என்று குறிப்பிட்டுள்ளார். (து)





யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/81 கொட்டடி மீனாட்சிபுரம் கிராமத்தில், யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிரதி முதல்வர் ஈசன் தலைமையில்நேற்று காலை டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டம் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்களின் வழிகாட்டுதலில் பொது மக்கள் மற்றும் இராணுவத்தினரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. (ந-111)

# திருமணம் இனி 18 வயதுக்கு மேல்!

## நாடாளுமன்றில் யோசனை முன்வைப்பு

கொழும்பு, ஓக. 28

இலங்கையில் திருமணத்துக் கான ஆகக்குறைந்த வயதெல்லை 18ஆக இருப்பதை உறுதிப்படுத்தும் தனிஆள் யோசனை நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள் ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார இந்த யோசனையை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவிடம் கையளித்தார்.

'திருமணத்துக்கான ஆகக்குறைந்த வயது' என்ற தலைப்பில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சர்வதேச நியமங்களின் அடிப்படையில் ஒவ்வொரு பிள்ளைகளினதும் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று பிரமித்த பண்டார சுட்டிக்காட்டுகின்றார்.

சிறுவர்கள் சிறுவர்களாகவே நடத்தப்பட வேண்டும் என்பதே இந்த யோசனையின் நோக்கம் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், யாரையும் ஓரங்கட்டுவதற்காக இது கொண்டுவரப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்த யோசனையின்படி ஆண், பெண் இரண்டு தரப்பினரும் 18 வயதைப் பூர்த்திசெய்த பின்னரே திருமணம் செய்துகொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் குழந்தை திருமணம் தொடர்பில் நீதிமன்றின் திருமண ரத்து தொடர்பாகவும் இந்த யோசனையில் முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-இ)

தனிமைப்படுத்தலில்

# வீட்டிலிருந்த கர்ப்பிணிக்கு கொரோனா!

கொழும்பு, ஓக. 28

வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர் சிலாபம், ஆராச் சிக்கட்டுவ பகுதியைச் சேர்ந்தவர். சிலாபம் பொது மருத்துவமனையில் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோதே அவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டது என்று மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் கபிலா மல்லவராச்சி தெரிவித்தார். டுபாயிலிருந்து நாடு திரும்பிய அவர் வவுனியா, தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தவில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் வீட்டில் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், அவருக்கு நடத்திய பி.சி.ஆர். சோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர் தற்போது தேசிய தொற்று நோயியல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (து)





மட்டக்களப்பு மாவட்ட வை.எம்.சி.ஏ நிறுவனத்தால் யு.எஸ்.எயிட் நிறுவன நிதிப் பங்களிப்புடன், கொவிட் 19 வைரஸ் தொற்று தவிர்ப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கான கிருமி தொற்றுநீக்கி விசுறும் இயந்திர உபகரணங்கள் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பிரிவு திணைக்களத்திற்கு, மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவால் நேற்று வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன், வை.எம்.சி.ஏ. நிறுவன பொதுச்செயலாளர் ஜெகன் ஜீவராஜ் மற்றும் வை.எம்.சி.ஏ நிறுவன உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ந-150)

## முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு பொதிகள்

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட முன்பள்ளி நிலை யங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சத்துணவுப் பொதிகள் வழங்கப்படும் என பிரதேசசபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மேலும்,கொரோனா வைரஸ் தொற்று காரணமாகப் பின்பற்றப்படும் சுகாதார நடைமுறைக்கு அமைய சமைத்த உணவுகளை முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்க முடியாது. இதனால் கடலை, கௌபி, பயறு போன்ற சத்துணவுப் பொதியை சபை வழங்கி வைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். இதேவேளை, இம் மாதத்துக்கான சத்துணவுப் பொதி சகல முன்பள்ளி மாணவர்களுக்கும் சபையால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ந-17)

# நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களாக 26 பேர்

கொழும்பு, ஓக. 28

26 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று வியாழக்கிழமை காலை சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் படி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தவிசாளராக செயற்படுகின்றார். பிரதிச் சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, குழுக்களின் பிரதித் தவிசாளர் இ.அங்கஜன், சபை முதல்வர் தினேஸ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் அதிகாரபூர்வமாக அங்கத்துவத்தைப் பெறுவர். இவர்களுக்கு மேலதிகமாக சமல் ராஜபக்ச, நிமல் ஸ்ரீபால டி சில்வா, பேராசிரியர் ஜி. எல் பீரிஸ், டக்ளஸ்தேவானந்தா, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, மகிந்த அமரவீர, வாசுதேவ நாணயக்கார, பிரசன்ன ரணதுங்க, மஹிந்த சமரசிங்க, கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், அனுரகுமார திசாநாயக்க, டிலான் பெரேரா, ரிஸாட் பதியூதின், ஆர். எம் ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், எம்.ஏ. சுமந்திரன், அலி சப்ரி ரஹீம் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவர். (து-44)

# மூடைகள் ஏற்றிச் செல்லும் பேருந்துகள்

## பயணிகள் விசனம்

வவுனியா, ஓக.28

**வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கிப் பயணிக்கும் தனியார் பேருந்தில் மரக்கறிகள் மற்றும் பத்திரிகைகள் போன்றன ஏற்றிச்செல்கின்றமையால் தாம் அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றோம் என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.**



வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி நேற்றுக் காலை 6 மணிக்குப் புறப்பட்ட தனியார் பேருந்தின் பின்புறமாகவுள்ள அனைத்து ஆசனத்திலும் மரக்கறி மூடைகள் மற்றும் பத்திரிகைகள் என்பன ஏற்றப்பட்டுள்ளமையால் ஆசனங்கள் இன்றி பயணிகள் நின்றபடியே தங்களது பிரயாணத்தைத் தொடர்ந்துள்ளனர்.

வவுனியா - மன்னார் தனியார் பேருந்துகளில் இவ்வாறு பொருள்கள் ஏற்றிச் செல்லப்படுவது வழமையாக இடம்பெற்றுவரும் சம்பவம் எனவும், இவ்விடயம் தொடர்பில் போக்குவரத்து அதிகார சபை யினர் கவனம் செலுத்தி உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-18)

# மறுக்கப்பட்ட மனிதங்கள் இசை வெளியீட்டு நிகழ்வு

முல்லைத்தீவு, ஓக.28

மாற்று வலுவுடையோர் மனங்களின் ஆதங்கங்களை வெளிக்கொண்டு வரும் பாடல் இசை வெளியீட்டு நிகழ்வு முல்லைத்தீவு உடையார்கட்டு பகுதியில் அமைந்துள்ள ஒளிரும் வாழ்வு இல்லத்தில் நடைபெற்றுள்ளது.




அன்னை திரேசாவின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று புதன்கிழமை தாயகக் கலைஞர்களின் உருவாக்கத்தில் உருவான 'மறுக்கப்பட்ட மனிதங்கள்' இசை வெளியீட்டு நிகழ்வு அ.வினோத் தலைமையில் நடைபெற்றுள்ளது. மாற்றுத்திறனாளிகள் வேதனையை, அவர்களின் தேவையை உள்ளக்குமுறல்களை வெளிக்கொணரும் பாடல் வரிகளை அ.வினோத் எழுத பாடலுக்கான இசையினை விமலும் பாடலை மதமீராவும் பாடியுள்ளார்கள்.

நிகழ்வில் பிரதம விருந்தி னர்களாக தேசபந்து கலை இளவரசன் மற்றும் வன்னியூர் செந்தூரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கலாலய நாடகக்குழுவின் ஸ்தாபகர் நாடக நடிகர் ஆசிரியர் பொ.உமாகாந்தன், அம்பலப்பெருமாள் குளம் அ.த.க.பாடசாலை முதல்வர் ச.சசிகுமார், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த் துறை முன்னாள் உதவி விரிவுரையாளர் ஜெ.ஜெயப்பிரசாந்தி, அகில இலங்கை கிருபா மக்கள் சேவை அறக்கட்டளை தொழிலதிபர் அ.கிருபாகரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (ந-19)

# தனிமையிலிருந்த 60 பேர் திரும்பினர்

கிளிநொச்சி, ஓக. 28

முழங்காவில் தனிப்படுத்தல் மையத்தில் இருந்த 60 பேர் தனிமைப்படுத்தலை முடித்து நேற்று வீடுகளுக்குச் சென்றனர். கிளிநொச்சி முழங்காவில் 651 படைமுகாமில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 60 பேரே வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமித்தம் சென்று கடந்த இரண்டாம் திகதி நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலுக்காக இந்த இராணுவ முகாமுக்கு கொண்டுவரப்பட்டனர்.

இந்த 60பேரில் அனைவரும் ஆண்களே. இவர்கள் நாட்டின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்தவர்கள். ஐந்து இராணுவ பேருந்துகளில் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இல்லை என உறுதிப்படுத்திய மருத்துவ சான்றிதழ்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. (த-6)

# வீதிப் புனரமைப்பு பணியில் ஈடுபட்டவர் மீது தாக்குதல்

வவுனியா, ஓக.28

வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்ட நபர் ஒருவர் மீது நேற்றுமுன்தினம் வவுனியா நெடுங்கேணி ஒலுமடு பகுதியில் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர் குடும்பஸ்தர் எனத் தெரியவருகின்றது.

காயமடைந்தவர் நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குறித்த ஊழியர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணியளவில் வீதி திருத்தும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது வீதியில் சென்ற வாகனங்களை வழிமறித்து ஒருவழிப்பயணம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. இதன்போது முச்சக்கரவண்டி செலுத்தி வந்த சாரதி ஒருவர் அந்த ஊழியரின் கருத்தை உள்வாங்காமல் தனது முச்சக்கரவண்டியைச் செலுத்தியமையால் இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது முச்சக்கரவண்டி சாரதி தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தனது நண்பர்களை அழைத்து வீதி திருத்தும் பணியில் ஈடுபட்ட அந்த ஊழியர் மீது கடுமையாகத் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-110)

# முன்பள்ளிகளில் தொற்று நீக்கம்

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களில் இயங்கும் முன்பள்ளிகள் தொற்று நீக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

இப் பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளி நிலையங்கள் சுகாதார விதிகளுக்கு அமைய, தமது கற்றல் செயற்பாடுகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சுகாதார விதிகளுக்கு அமைய முன்பள்ளி நிலையங்கள் யாவும் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை தொற்று நீக்கம் செய்யப்படும் என்று பிரதேச சபை தெரிவித்துள்ளது. (ந-17)

# குற்றச் செயல்கள் தடுக்கப்பட்டுள்ளன

*மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.28



குற்றச் செயல்கள் பெரியளவில் தற்போது தடுக்கப்பட்டுள்ளன என்று உள்துறை பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் இடர்முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பெரியளவில் பரவியிருந்த திட்டமிட்ட குற்றச் செயல்களைப் போன்று போதைப் பொருள் குற்றங்கள், கப்பம் பெறுதல் மற்றும் பாதாள உலகக்குழு உறுப்பினர்களின் செயற்பாடுகள் என்பன சமூகத்தை பெரியளவில் தவறான வழிகளை நோக்கி கொண்டு சென்றுகொண்டிருந்த நிலையில் தற்போது அவற்றின் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன. இதில் நாங்கள் மிகப் பெரிய வெற்றியை பெற்றுள்ளோம். எதிர்காலத்திலும் இதே போன்ற வெற்றியை பெற்றுக்கொள்வோம்.

எமது நாட்டு மக்களும், எதிர்கால தலைமுறையினரும் சமூகத்தில் மகிழ்ச்சியாகவும், தொந்தரவுகள் இன்றியும் கௌரவமாக வாழக்கூடிய சூழலை உருவாக்க கடமைப்பட்டுள்ளோம் - என்றார். (ர-இ)





வவுனியா கோவில்குளம் சிவன் ஆலயத்தில் இன்றும் நாளையும் எண்ணெய்க்காப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலில் நாளை இடம்பெறவுள்ள அதி சுந்தர பஞ்சதள பஞ்ச கலச நூதன இராஜ கோபுர சகித புனராவர்த்தன அஷ்டபந்தன ஸ்வர்ண பந்தன சமர்ப்பண நவ (9) குண்டக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டே இந்த எண்ணெய்க்காப்பு இடம்பெறுகின்றது. இன்று காலை 8.00 மணியளவில் வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பூரண ஒத்துழைப்புடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எண்ணெய்க் காப்பு நிகழ்வு இடம்பெற்றது. நாளை பிற்பகல் 3.00 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்பு நிகழ்வில் கலந்து கொள்ளமுடியும் என்பதையும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ற)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கட்டாயப் பயிற்சி கட்டாயம்தானா?

பழைய குருடி மீண்டும் கதத்வைத் திறந்துவிட்டதைப்போல பட்டதாரி பயிலுநர்களுக்கு கட்டாய இராணுவத் தலைமைத்துவப் பயிற்சி இரு வாரங்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது. தேர்தல் முடிந்தவுடன் கைகளில் நியமனக் கடிதம் கிடைக்கும், கிடைத்தவுடன் அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் பணியில் அமரலாம் என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்த பட்டதாரிகளுக்கு இந்தக் கட்டாயப் பயிற்சி கல்லைத் தூக்கித் தலையில் போட்டிருக்கிறது.

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கும், பட்டதாரிப் பயிலுநர்களுக்கும் இந்த கட்டாய தலைமைத்துவப் பயிற்சி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. பல்கலை மாணவர்களையும் அரச உத்தியோகத்தர்களையும் தலைமைத்துவம்சார் பண்புகளில் மிளிரச்செய்வதற்கான ஒரு பிரயோகச் செயன்முறையே இந்தக் கட்டாயப் பயிற்சி என்று அரசு வியாக்கியானம் செய்திருந்தது. ஏதேனும் ஓர் இராணுவப் பயிற்சித் தளத்தில் கொண்டுசெல்லப்பட்டு மாணவர்களுக்கும் பட்டதாரிப் பயிலுநர்களுக்கும் கடுமையான பயிற்சிகள் அங்கு வழங்கப்படும். அதைப் பூர்த்தி செய்த பின்னரே அவர்கள் பல்கலைக்கழகம் செல்லவும், பணியில் இணையவும் அனுமதி வழங்கப்படும். பல்கலைக் கழக அனுமதி கிடைத்துவிட்டது என்றோ பணி கிடைத்துவிட்டது என்றோ எவரும் மகிழாது கட்டாயப் பயிற்சி பற்றிய கவலையுடன் இருந்த காலமும் உண்டு.

இப்படியெல்லாம் இராணுவப் பயிற்சி வழங்கியும் எந்தவித முன்னேற்றமோ அல்லது மாற்றமோ பல்கலைக்கழக மாணவர்களிடத்தோ அல்லது அரச பணியாளர்களிடத்தோ ஏற்படவில்லை. சுருங்கச் சொன்னால் இந்தக் கட்டாயப் பயிற்சி என்பது தேவையில்லாத ஓர் ஆணியே. இதனாலேயே நல்லாட்சிக் காலத்தில் இந்தக் கட்டாய இராணுவப் பயிற்சி இல்லாதொழிக்கப்பட்டது. ஆனால், மீண்டும் ராஜபக்சக்களின் யுகம் இலங்கையில் தொடங்கியுள்ளதால் எவையெல்லாம் அவர்களின் முன்னைய ஆட்சியில் நடைமுறைப் படுத்தப்பட்டனவோ அவற்றையெல்லாம் மீளுயிர்ப்புச் செய்யத் தொடங்கிவிட்டனர். அப்படித்தான் இந்தக் கட்டாய இராணுவப் பயிற்சியும் உயிர்த்தெழ வைக்கப்பட்டுள்ளது.

கோயில்த் திருவிழாவுக்குப் போவதற்கே கொரோனாவைக் காரணம்காட்டி ஆயிரத்தெட்டுக் கட்டுப்பாடுகளை விதிக்கும் இந்த அரசுதான் தேவையே இல்லாத கட்டாயப் பயிற்சியை தோண்டியெடுத்துவந்து நூற்றுக்க ணக்கானோரை இராணுவ முகாம்களுக்குள் கொண்டுவந்து ஒரே இடத்தில் தங்கவைப்பது மட்டும் எந்தச் சுகாதார நடைமுறைக்குள் அடங்கும்?. கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் நடக்கவேண்டிய பல நிகழ்வுகளே ஒத்திவைக்கப்பட்டுள்ள போதும் இத்தகைய கட்டாயப் பயிற்சிகளுக்காக பெருமளவானோரை ஓரிடத்தில் கூடச்செய்வது தன்பாட்டுக்கு ஒதுங்கிச் செல்லும் கொரோனாவை வலிந்து விருந்துசாப்பிட கையைப்பிடித்து அழைத்து வருவதற்குஒப்பானது. எனவே இந்தக் காலகட்டத்தில் கட்டாயப் பயிற்சி என்பது கட்டாயம்தானா என்பதை ராஜபக்ச அரசு ஒன்றுக்கு இருமுறை யோசிக்க வேண்டும்.



# காப்பெற்றாக மாறும் வீதி; அகற்றப்படும் கட்டடங்கள்

மானிப்பாய்,ஒக.28


**கல்லுண்டாய் வீதி காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட உள்ளதால், காக்கைதீவு இறங்குதுறையில் உள்ள கட்டடங்கள் அகற்றப்படவுள்ளன. அவற்றுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான வேலைத்திட்டத்தை வலி. தென்மேற்கு பிரதேச சபை முன்னெடுத்துள்ளது.**

கல்லுண்டாய் சந்தியில் இருந்து பொன்னாலை செல்லும் கல்லுண்டாய் வீதி காப்பெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது. இதன் முதல் கட்டமாக தற்போது வீதியைப் பின்னோக்கி அகலிக்கும் வேலையும், புதிய பாலங்கள் அமைக்கும் வேலையும் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் கல்லுண்டாய் வீதியில் அமைந்துள்ள காக்கைதீவு இறங்குதுறையை வலி. தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள நூற்றுக்கணக்கான மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இவர்களின் நலன்கருதி ஓய்வு மண்டபம், கூறு மண்டபம், கடல் உணவுச் சந்தை மற்றும் கிணறு ஆகியன அமைக்கப்பட்டிருந்தன.

தற்போது வீதி அகலிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், இறங்குதுறையில் வீதியோரமாக அமைக்கப்பட்டிருந்த சில கட்டடங்கள் அகற்றப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-115)



## சபாநாயகர் யாப்பாவுடன் இந்தியத் தூதுவர் சந்திப்பு

கொழும்பு,ஓக.28

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார்.

நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

கலந்துரையாடலில் நாடாளுமன்றப் பொதுச்செயலாளர் தம்மிக்க தசநாயக்கவும் கலந்துகொண்டார்.

மஹிந்த யாப்பா அபேவர்தன சபாநாயகராக பதவியேற்றதன் பின்னர், இடம்பெற்ற வெளிநாட்டு தூதுவருடனான முதலாவது சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

## ஈஸ்டர் தாக்குதல்: எண்மருக்கு அழைப்பு

கொழும்பு,ஓக.28

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, முன்னாள் அமைச்சர்களான அகிலவிராஜ் காரியவசம், ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட எண்மர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியை இன்று வெள்ளிக்கிழமையும், அகிலவிராஜ் காரியவசத்தை ஓகஸ்ட் 31 ஆம் திகதியும் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

அது தவிர முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க உள்ளிட்டோரை செப்ரெம்பர் 2 ஆம் திகதியும், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன்துரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) ஆகியோரை செப்ரெம்பர் 3 ஆம் திகதியும் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை செப்ரெம்பர் 7 ஆம் திகதியும், இராஜாங்க அமைச்சர் திலக் அமுனுகமவை செப்ரெம்பர் 8 ஆம் திகதியும் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

# விவசாயக் காணியை விடுவிக்கக் கோரிக்கை

மன்னார்,ஓக.28

மடு பிரதேச செயலகப் பிரிவில், கீரிச்சுட்டான் பகுதியில் காலாகாலமாக விவசாயம் மேற்கொண்டு வந்த விவசாயக் காணிகளில், விவசாயம் செய்ய வன திணைக்களத்தினர் தடை விதித்துள்ளனர். அதனால் விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். எனவே அந்தக் காணிகளை விடுவிக்குமாறு, மன்னார் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் விவசாயப் பிரதிநிதிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம், மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டத்தில் கீரிச்சுட்டான் பகுதி விவசாய அமைப்பைச் சார்ந்த பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:

இங்குள்ள அரச காணிகள் மக்களுக்குப் பகிர்ந்த ளிக்கப்பட்டிருந்தன. முப்பது வருடங்களுக்கு மேலாக காணிகளில் மக்கள் விவசாயத்தை மேற்கொண்டு வந்தனர்.

போர்க்காலங்களில் மக்கள் இடம்பெயர்ந்தனர். மீண்டும் 56 குடும்பங்கள் இங்கு மீள் குடியேறியுள்ளனர்.அங்கு விவசாயம் செய்யப்பட்ட காணிகளைத் துப்புரவு செய்து, விவசாயத்தை மேற்கொள்ள முயற்சித்தனர். எனினும் வனத் திணைக்களம் இதற்கு தடை விதித்துள்ளது.

விவசாயக் காணிகளுக்கு வனத் திணைக்கள அடையாளமிடவில்லை. எனவே தங்கள் காணிகளில் விவசாயத்தை மேற்கொள்ள வழி செய்ய வேண்டும்-என்றனர்.

அதற்குப் பதிலளித்த வன இலாகா அதிகாரி, இந்த விடயம் வன பாதுகாவலர் நாயகத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்படும் என்றார். இந்த நிலையில் விவசாயக் காணிகளை, மடு பிரதேச வன திணைக்களத்தினர் நேற்று வியாழக்கிமை, பிரதேச செயலக அதிகாரிகளுடன் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (க-60)

# இருப்பதோ 30; கேட்பதோ 70!

கொழும்பு, ஓக.28

30 உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு மட்டும் அனுமதி கொடுத்துள்ள நிலையில் புதிய அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 70 பேர் உத்தியோகபூர்வ இல்லங்களை கோரியுள்ளனர் என பொது சேவை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் விண்ணப்பதாரர்களின் தேவை மற்றும் தூரம் ஆகிய விடயங்களின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் 70 பேருக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதாயின் அமைச்சு பெரும் சிரமங்களை எதிர்கொள்ளும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# உத்தியோகத்தர்களுக்கு சிறைகளில் தட்டுப்பாடு

கொழும்பு, ஓக.28

சிறைச்சாலைகளிலுள்ள பல்வேறு பதவி நிலைகளுக்கு உத்தியோகத்தர்கள் தரத்தைச் சேர்ந்த 1500 பேர் வரையிலானோருக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது எனத் தெரியவந்துள்ளது.

அந்தப் பதவி வெற்றிடங்களை நிரப்ப 2016 ஆம் ஆண்டிலிருந்து பல தடவைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தாலும், கடந்த ஆண்டு வரை எந்தவொரு நியமனமும் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் நியமனங்கள் வழங்குவதற்கான செயற்பாடுகள் இரு தடவைகள் முன்னெடுக்கப்பட்டும் இறுதி நேரங்களில் பல்வேறு காரணங்களினால் அவை வழங்கப்படவில்லை. இதனால் பதவி வெற்றிடங்களில் அதிகரிப்பு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சேவையிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர்களால் ஏற்பட்ட பதவி வெற்றிடங்களுக்குப் புதிதாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையே இந்த நிலைக்குக் காரணம் எனச் சிறைச்சாலைகள் திணைக்கள பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-ச)

# நிறம் மாறிய வெள்ளை யானை

கொழும்பு. ஓக.28

மாதுருஓயா தேசிய வனப் பகுதியில் சுற்றித்திரிந்த வெள்ளை யானை நீரில் குளித்து விட்டு வந்த பின்னர் சாதாரண யானையாக மாறியுள்ளது. களி மண் அல்லது ஏதாவது ஒரு பொருளை யானை தனது உடலில் பூசிக் கொண்டமையினால் அது வெள்ளை யானையாக காட்சியளித்துள்ளது. எனினும் இலங்கைக் காடுகளில் வெள்ளை யானை வாழ்வது தொடர்பிலான தகவல்கள் உள்ளன என்று சுற்றுச் சூழல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-இ)

## புழுங்குகிறது நாடு!

# 6 லீற்றர் தண்ணீர் தினமும் குடியுங்கள்!

கொழும்பு, ஓக. 28

**இலங்கை முழுவதும் கடும் வெப்பமான கால நிலை நிலவுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இந்த நிலையில் நாளாந்தம் சுமார் 6 லீற்றர் நீர் பருகுமாறு சிறுநீரக நோய் தொடர்பான உள்ளூர் பரிசோதனை குழு உறுப்பினரான பேராசிரியர் ஜய சுமன சகலரையும் கேட்டுக்கொண்டுள்ளார். போதுமான அளவு தண்ணீர் பருகவில்லை என்றால் சிறுநீரகத்தில் பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும் அதற்கு மேலதிகமாக சருமத்துக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார். முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையான காலப்பகுதியில் முடிந்தளவு ஓய்வில் இருக்குமாறும் பிற்பகல் வேளைகளில் பயணங்கள் மேற்கொள்ளும் போது குடை அல்லது தலைக்கவசம் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இயன்றளவுக்கு இளநீர் மற்றும் நீர் சத்துக்கள் அதிகம் உள்ள பழங்கள் மற்றும் மரக்கறிகளை உட்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

# ஆபத்தான படையணி பட்டியலில் இலங்கையின் ஊடுருவும் படை

உலகின் ஆபத்தான மூன்றாவது படையணியாக இலங்கை இராணுவத்தின் எல்.ஆர்.ஆர்.பி. என்ற ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி பெயரிப்பட்டுள்ளது.

மில்டரி.இன்போ என்ற இணையத்தளம் இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் ஐக்கிய அமெரிக்காவின் கடற்படை முதலாவது இடத்திலும் ரஷ்ய சம்மேளனத்தின் விசேட நடவடிக்கை படை இரண்டாவது இடத்திலும் காணப்படுகின்றன. (வ-இ)

# அமெரிக்கத்தூதுவர் சம்பூர் வருகை

திருகோணமலை, ஓக.28

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா வீ டெப்லீக்ஸ் திருகோணமலை சம்பூர் கனித்தீவு நாவலர் வித்தியாலயத்துக்கு நேற்று வருகை தந்தார்.

அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 93 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பாடசாலையில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டம், ஆசிரியர் விடுதி, கழிப்பறை போன்றவற்றின் திறப்புவிழாவுக்கே இவ்வாறு வருகை தந்துள்ளார்.



இந்த நிகழ்வானது பாடசாலை அதிபர் எஸ்.பாக்கியஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரினால் குறித்த பாடசாலையின் அதிபர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராத யஹம்பத் போன்றோருக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் முத்து பண்டா, மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-40)



# 100 அடி மரத்தில் ஏறி பெண் உண்ணாவிரதம்

பலாங்கொடை, ஓக.28

பலாங்கொட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட பகுதியில் உள்ள 100 அடி மரம் ஒன்றில் ஏறி பெண் ஒருவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

பலாங்கொடை தயவின்ன ஹதகரிய பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். தாம் வசித்து வந்த நிலப்பரப்பை சட்டபூர்வமாகப் பெற்றுக்கொடுக்குமாறு கோரியே அவர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில், குறித்த நிலப்பரப்பு தொடர்பில் வழக்கு உள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதேச செயலாளர், இந்தப் பெண்ணுக்கு வேறு நிலப்பரப்பு வழங்க முன்வந்துள்ள போதும் அதனை அவர் ஏற்க மறுக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார். (ந)

# ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டம்; ரயில்வே திணைக்களத்துக்கு பணியாளர்கள்?

கொழும்பு, ஓக.28

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் ரயில்வே திணைக்களத்துக்கு புதியவர்களை உள்வாங்குவது தொடர்பில் புதிய யோசனையொன்றை ரயில் சேவை தொழிற்சங்கங்களின் கூட்டு முன்னணி ஜனாதிபதிக்கு முன்வைத்துள்ளது.

அதன்படி, மாதாந்தம் 50 இலட்சம் ரூபா வரை செலவு செய்து தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ரயில் பெட்டிகளைச் சுத்தம் செய்யும் பணியை குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேரைக் கொண்டு நிறைவேற்ற இயலும் என்று தொழிற்சங்கங்களின் கூட்டு முன்னணி யோசனை முன்வைத்துள்ளது. அத்தகைய தொழிலாளர்கள் மேற்கொள்ளும் பணியை மேற்பார்வை செய்வதற்கு வேலையற்ற பட்டதாரிகள் சிலரையும் நியமனம் செய்வதன் மூலம் வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் அரசின் திட்டத்தின் ஒரு பகுதியை நிறைவேற்ற இயலும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் ரயில்வே திணைக்களம் அந்தச் சேவைக்காகச் செலவிடும் மாதாந்தத் தொகையில் 30 இலட்சம் ரூபா வரை மீதப்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (வ-ச)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திற்கு புதிதாக திருமஞ்சம் அமைப்பதற்கான ஆரம்ப சமய கிரியைகள் கடந்த சனிக்கிழமை ஆவணிச் சதுர்த்தி நாளில் இடம் பெற்றது. ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் திருமஞ்சத்தை உருவாக்கும் சிற்பக் கலைஞர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ எஸ்.பாலசந்திரன், பரிபாலன சபை தலைவர் ஜெ.முத்துக்குமாரசாமி, செயலாளர் என்.காண்டீபன் மற்றும் சிற்பக் கலைஞர்கள் போன்றோர் கலந்து கொண்டனர். (ந-17)

கொரோனா அச்சம்;

# மக்கள் எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கையையும் பின்பற்றவில்லை

*சுகாதாரப் பகுதியினர் குற்றச்சாட்டு*

**யாழ்ப்பாணம், ஓக.28**
**உலக நாடுகளில் கொரோனாவின் தாக்கம் குறைவடையாத நிலையில், எமது நாட்டு மக்கள் இது தொடர்பான எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பின்பற்றுவதில்லை என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.**

கொரோனாத் தொற்று அபாயம் இதுவரை நீங்கவில்லை. பொதுமக்கள் எந்த நேரமும் விழிப்புடன் இருக்குமாறு இலங்கை மருத்துவ சங்கமும் உலக சுகாதார நிறுவனமும், படை அதிகாரிகளும் அறிக்கைகளை தினமும் வெளிவிட்டுக் கொண்டிருக்கும் நிலையில், மக்கள் ஏனோதானோ என்ற நிலைப்பாட்டில் நடமாடுகின்றனர் என சுகாதாரப் பகுதியினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

வாகனங்களில் பயணிக்கும் போது பயணம் முடியும் வரை முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், வாகனங்களில் குறிப்பாக அரச, தனியார் பேருந்துகளில் பயணிப்போரில் 90 வீதமானவர்கள் முகக் கவசம் அணிந்தவாறு பயணிப்பதில்லை.

இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் பலர் எமது பகுதிக்கு படகுகள் மூலம் தப்பி வருகின்றனர்.

அவ்வாறு தப்பி வருவோர் தனிமைப்படுத்தலுக்கு முன்னர் பேருந்துகளில் ஏறி சொந்த இடங்களுக்கு வருகின்றனர். அவர் கொரோனா நோயாளியாயின் பேருந்தில் பயணிக்கும் சாரதி ,நடத்துநர் மற்றும் பேருந்து புறப்பட்ட இடத்திலிருந்து முடியும் தூரம் வரை பயணித்த பயணிகள் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகும் நிலை ஏற்படும். இந்த நோய் பரவாமல், தடுக்கவே பயணங்களை மேற்கொள்ளும்போது கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துவருகின்றனர்.

கொரோனாத் தொற்று எவ்வாறு பரவுகிறது என்பது தெரியாததால் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளனர். (ற-9)

## 347 உளவு அறிக்கைகள் அதிகாரிகளுக்கு சமர்ப்பிப்பு

கொழும்பு, ஓக. 28
2015 ஆம் ஆண்டு முதல் 347 உளவுத்துறை அறிக்கைகள் மூத்த அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசீம் தொடர்பாகவே உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது என நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணைகளின்போது அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும், சிரேஷ்டபிரதி பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இருப்பினும் தகவலின் அடிப்படையில் எடுக்கப்படும் அடுத்த நடவடிக்கை குறித்து மூத்த அதிகாரிகள் யாரும் தனக்கு அறிவிக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தாக்குதலுக்கு முன்னர் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், சிலர் தங்கள் அலுவலகங்களை மூடிவிட்டு தாக்குதலுக்குப் பின்னர்தான் மீண்டும் அவற்றை திறந்தார்கள். சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் இருந்தபோதிலும் சிலர் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர். சிலர் வீட்டில் தங்கி தூங்கினர், இன்னும் சிலர் தேவாலயத்துக்கு செல்வதைத் தவிர்த்தனர்.

நான் செய்ய வேண்டியதைச் செய்தேன். பாதுகாப்பு செயலாளர், அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கும் ஜனாதிபதியிடமும்கூட தெரிவிக்க முயன்றேன். அவர்கள் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கவில்லை. அது என்னுடைய தவறல்ல. என்று தெரிவித்துள்ளார். (து)

வவுனியா மேல்நீதிமன்றில்

## மீள் விளக்கத்துக்கு வருகிறது கண்ணதாசன் வழக்குத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றிய கண்ணதாசன் மீதான ஆயுள் தண்டனைத் தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் அவர் மீதான பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு வழக்கை மீள விளக்கத்துக்காக எடுப்பதற்காக வவுனியா மேல் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற மிருதங்க கலைஞர்களில் ஒருவரான கண்ணதாசன் தமிழீழ இசைக் கல்லூரியின் பொறுப்பாளராக இருந்து, போரின் முடிவில் படையினரிடம் சரணடைந்து மறுவாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

பின்னர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராக பணியாற்றி வந்தார். இந்நிலையில், கிளிநொச்சி மாவட்டம் உருத்திரபுரம் பகுதியில் 2007 ஜனவரி மாதமளவில், மஞ்சுளா விஜயபாலன் எனும் சிறுமியைக் கட்டாயமாக விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்த்ததாக அவருடைய தாயார், கண்ணதாசன் மீது 2014 மார்ச் மாதமளவில் வழக்குத் தொடுத்தார்.

அடுத்த ஆண்டே பயங்கரவாத விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கண்ணதாசன், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு, பல மாதங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அதனடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக, பலவந்தமாக ஆள்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விரிவுரையாளர் கண்ணதாசனுக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு 2017ஆம் ஆண்டு அவருக்கு வவுனியா மேல் நீதிமன்றால் ஆயுட்தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து க.கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

அந்த மேன்முறையீட்டு மனு மீது விசாரணை, இரண்டு ஆண்டுகளாக இடம்பெற்று வந்த நிலையில் கடந்த ஜுலை 22ஆம் திகதி அவரது ஆயுள் தண்டனையை இரத்துச் செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுக்க அனுமதியளித்திருந்தது.

இந்த நிலையில் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்கு வவுனியா மேல் நீதிமன்றில் மீளவும் ஒப்படைக்கப்பட்டது.

அதேவேளை இசைத்துறை விரிவுரையாளர் கண்ணதாசன், மேன்முறையீட்டு நீதிமன்றால் விடுவிக்கப்பட்டார் என்று கடந்த ஜுலை 22ஆம் திகதி ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. எனினும், அவர் விடுவிக்கப்படவில்லை. (து)

## உறவுகளின் போராட்டத்துக்கு கட்சி இளையோரும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஓக. 28
காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி ஆதரவையும் பங்களிப்பையும் வழங்கியுள்ளது.

அன்றையதினம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி உறுப்பினர்கள், மகளிர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளையோர்கள் அனைவரும் போராட்டத்தில் இணைந்து வலுச்சேர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். என்று முன்னணி கோரியுள்ளது. (து)

மருத்துவர் ஷாபி விவகாரம்:

## குழந்தையின் சடலத்தை தோண்டியெடுக்க உத்தரவு

கொழும்பு, ஓக. 28
குருநாகல் போதனா மருத்துவமனையின் பிரசவ மற்றும் மகப்பேற்று பிரிவின் மருத்துவராக இருந்த சேகு சிஹாப்தீன் மொஹமட் ஷாபி, சிஷேரியன் சத்திர சிகிச்சை செய்த பின்னர் பிரசவிக்கப்பட்டு உயிரிழந்த குழந்தையின் சடலத்தை நாளை தோண்டியெடுக்க குருணாகல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குருநாகல் போதனா மருத்துவமனையின் பிரசவ மற்றும் மகப்பேற்று பிரிவின் மருத்துவராக இருந்த சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபி சிஷேரியன் சத்திர சிகிச்சை செய்த தாய் ஒருவர் பிரசவித்தார் எனக் கூறப்படும் சிசு, இரு நாள்களில் உயிரிழந்தமை தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக, தாய் ஒருவர் முன்வைத்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய குருநாகல் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

இந்தநிலையில் குறித்த விடயத்தை குருநாகல் நீதிவானுக்கு பிரத்தியேக வழக்காக தாக்கல் செய்துள்ள பொலிஸார், அந்த வழக்கில் சந்தேகநபர்கள் எவரையும் பெயரிடாத போதும், உயிரிழந்த சிசுவின் சடலத்தை மீளத் தோண்டி எடுத்து, பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நேற்று அனுமதி பெற்றுக்கொண்டனர். அதன்படி இன்று வெள்ளிக்கிழமை 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு, குறித்த சிசுவின் சடலத்தைத் தோண்டி எடுக்குமாறு குருநாகல் நீதிவான் சம்பத் ஹேவாவசம் உத்தரவிட்டார். (து)

## சீருடை வவுச்சருக்கு கால எல்லை நீடிப்பு

கொழும்பு, ஓக. 28
அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் முதலாம் தர மாணவர்களுக்கு இந்த வருடத்துக்காக வழங்கப்பட்ட பாடசாலைச் சீருடைக்கன கட்டண அட்டை (வவுச்சர்) செல்லுபடியாகும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த வவுச்சர் இந்த மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைய விருந்தது. நாட்டில் நிலவிய கொவிட் 19 அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வவுச்சர் செல்லுபடியாகும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (து-இ)

# உறவுகளின் கண்ணீர் துடைக்க சர்வதேசமே அழுத்தம் கொடு!

## கத்தோலிக்க சமாதான ஆணைக்குழு கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஓக. 28**

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கண்ணீர் துடைத்து ஆறுதல் அளிக்க சர்வதேசம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று யாழ் கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அத்தோடு வரும் 30ஆம் திகதி வடக்கு கிழக்கில் இடம்பெறும் போராட்டத்துக்கும் ஆதரவு வழங்குவதாகவும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்த அறிக்கையில் உள்ளதாவது;
தற்போது ஆட்சியிலுள்ள அரசின் காலத்தில் தான் பெரும்பாலானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இந்த மக்கள் இராணுவத்தினரிடம் விசாரணைக்காகக் கையளிக்கப்பட்டவர்கள், விசாரித்த பின் விடுவோம் என்று இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள், வெள்ளைக் கொடியுடன் சரணடைந்து இராணுவத்தினால் வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள். இவர்களுக்கு என்ன நடந்தது என்று தான் உறவுகள் கேட்கின்றனர். இதற்கு அவர்களை மண்ணுக்குள் தான் தேட வேண்டும், அவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்க வேண்டும் என்ற பொறுப்பற்ற பதில்கள் அரச தரப்பினரிடமிருந்தும், அரச தரப்புப் பேச்சாளரிடமிருந்தும் வருகின்றமை ஏமாற்றம் அளிக்கின்றது. ஓகஸ்ட் 30ஆம் திகதி இம் மக்கள் முன்னெடுக்கும் சாத்வீகப் போராட்டத்துக்கு எமது முழு ஆதரவைத் தெரிவிக்கின்றோம். சர்வதேசம் இம்மக்களின் கண்ணீர் துடைத்து ஆறுதல்அளிக்க தமது நாட்டின் தலை வர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ப)

# பெயரை நீக்குமாறு அழுத்தினார் மங்கள

## முன்னாள் கட்டளை அதிகாரி சாட்சியம்

கொழும்பு, ஓக. 28
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதர வளித்தனர் என கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டி ருந்த இரண்டு பேரை, அதிலிருந்து நீக்குமாறு முன் னாள் அமைச்சர் மங்கள சமரவீர தனக்கு அழுத்தம் கொடுத்தார் என கிரித்தலே இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாகச் செயற்பட்ட லெப்டினன் கேர்ணல் ஷம்மி குமாரரத்ன தெரிவித்துள்ளார்.
2015 ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர செயற்பட்ட போதே தனக்கு இவ்வாறு அழுத்தம் கொடுத்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார். அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
“இம்மானுவேல் அடிகளார் மற்றும் சுரேன் சுரேந்திரன் ஆகியோரின் பெயர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவளித்தவர்கள் என கறுப்புப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்தது. அவர்கள் இருவரும் தமது நண்பர்கள் எனவும் கறுப்புப் பட்டியலில் பெய ரிடப்பட்டிருந்த அந்த இரண்டு பேரை, அதிலிருந்து நீக்குமாறும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர எனக்கு அழுத்தம் கொடுத்தார்” என்று ஷம்மி குமாரரத்ன சாட்சியமளித்துள்ளார். (ப-இ)

# முன்னைய திருத்தங்களை ஒழிக்கவே அரசு முயற்சி

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 28
20ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருவதாகக் குறிப்பிட்டு 13,14,16,17 மற்றும் 19 ஆகிய அரசமைப்புத் திருத்தங்களை இல்லாதொழிக்கவே அரசாங்கம் முயற்சித்து வருகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
அமெரிக்க பிரஜையான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கே அரசாங்கம் விரைவில் அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு முயற்சித்து வருகின்றது. இந்த நாட்டைப் பொறுத்த மட்டில் மொழிப் பிரச்சினையே பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் தொடர்ந்தும் மொழியை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினையைத் தோற்றுவிப்பது தவறான செயற்பாடாகும். சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் சிங்கள மொழியில் வழக்கு விசாரணைகள் இடம்பெறுவதைப் போன்று தமிழ் மக்களுக்கும் அந்த உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இவற்றை நீக்க முயற்சிப்பதால் மேலும் நெருக்கடிகள் அதிகரிக்குமே தவிர மாற்றங்கள் எதுவும் ஏற்படாது - என்றார். (ப-இ)

# 13ஐ ஒழிப்பதற்கு ஐ.ம.ச. ஒத்துழைக்காது

## யாழ். அமைப்பாளர் தெரிவிப்பு

13ஐ இல்லாதொழிப்பதற்கோ அல்லது பலத்தைக் குறைப்பதற்கோ எந்தவொரு சந்தர்ப்பத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளாதென ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் உமா சந்திரப்பிரகாஷ் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
19 ஆவது திருத்தத்தை நீக்கி 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான யோசனைகளை அரசாங்கம் முன்வைத்திருக்கின்றது. இலங்கையர்களாக நாம் இவற்றிலுள்ள நிறை, குறைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சஜித் பிரேமதாச 13 ஆம் திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்கு துணைபோக மாட்டேன் எனக் குறிப்பிட்டிருந்தார். அந்த நிலைப்பாட்டிலேயே ஐக்கிய மக்கள் சக்தி இன்றும் இருக்கின்றது - என்றார். (ப-இ)

## அத்துமீறி மீன்பிடி:

# சிக்கின 3 படகுகள்

யாழ்ப்பாணம், ஓக. 28
புத்தளத்திலிருந்து வந்து வடமராட்சிக் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்களின் மூன்று படகுகள் உள்ளூர் மீனவர்களின் உதவியுடன் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் நாகர்கோவில் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
நாகர்கோவில் கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி தென்னிலங்கை மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தொடர்பாக கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. தொழிலில் ஈடுபட்ட புத்தளத்தைச் சேர்ந்த மீனவர்கள் கரையேறியபோது, அங்கு கூடிய உள்ளூர் மீனவர்கள் அந்தப் படகுகளை அதிகாரிகளின் உதவியுடன் தடுக்க முயன்றனர். படகுகளில் இருந்தவர்கள் தப்பித்த நிலையில் 3 படகுகளை கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றினர். (ப-20)



கஸ்தூரி ஜெயக்குமார்
விவசாயபீட மாணவி,
யாழ்.பல்கலைக்கழகம்

# வடக்கு மண்வளம்: தென்னை செய்கைக்கு உகந்ததா?

*(நேற்றைய தொடர்ச்சி)*

வரைபடமானது அவ்விடத்தின் அண்மைக் காலத்து செய்மதி மூலம் பெறப்பட்ட படங்கள் நில அளவைத் திணைக்களப் படங்கள் மற்றும் கள ஆய்வில் எடுக்கப்பட்ட APO பதிவுகள் என்பவற்றைக் கருத்திலெடுத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் வரை படத்தின் மூலம் தென்னை வளர்க்கும் இடமானது இரண்டு பிரதான பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. பொருத்தமான இடம் 5 பிரிவுகளைக் கொண்டது. S1, S2. S3, S4, S5
2. பொருத்தமற்ற இடம் 2 உப பிரிவுகளைக்கொண்டது. N1, N2

இவ் வரைபடத்தின் மூலம் தென்னைச் செய்கைக்கு மிகப்பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்து. அதில் முதலீட்டை மேற்கொள்ள முடியும். குறிப்பிட்ட இடத்தின் அதி உச்ச உற்பத்தித்திறனை சரியான பயிர்ச்செய்கை முறைகள் மூலம் அடைய முடியும். விரிவாக்க உத்தியோகத்தர்கள் மிகவும் பொருத்தமான ஆலோசனையை வழங்கமுடியம். தென்னை ஆராய்ச்சிகள், அபிவிருத்திகள் சம்பந்தமான பொருத்தமான கொள்கைகளை வகுக்க முடியும். துரதிஷ்ட வசமாக வட மாகாணத்தில் இன்னமும் தென்னை ஆராய்ச்சி நிலையத்தினால் இடப்பொருத்தப்பாட்டு வரைபடம் இங்கு தயாரிக்கப்படவில்லை. இலங்கையில் சராசரியாக ஒரு தென்னை மரம் வருடத்துக்கு 93 காய்களையே தரும். இலங்கையின் தென்னைக்குரிய சாதகமான வரைபட அமைப்பின் பிரகாரம் (Land Suitability Map for Coconut)) தென்னைப் பயிர்ச் செய்கைக்கு சாகமான இடங்களான குருநாகல், புத்தளம், மாறவில போன்ற இடங்களின் இட அமைப்பானது S1, S2 போன்று இருந்தாலும் எமது வடபகுதியானது உலர் வலயத்தில் இருப்பதனாலும் மணற்தன்மையான அல்லது இருவாட்டி மண்ணே இருப்பதனாலும் பெரும்பாலும் S3, S4, S5 இற்கே சாத்தியத்தன்மையுள்ளது. ஆகையால் சாராசரித் தேங்காய் உற்பத்தி முறையே 78, 62, 31 ஆக இங்கு காணப்படும்.

**மீண்டெழும் தென்னைச் செய்கை**

வன்னிப் பெருநிலப்பரப்பில் கணிசமான தென்னைப் பயிர்ச்செய்கை இறுதிப் போருக்கு முன்னதான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. யுத்த காலப் பகுதியில் பனள மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் பெரும் வீழ்ச்சியைக் கண்ட தென்னைப் பயிர்ச்செய்கை இன்று வரை மீளெழ முடியாத நிலையில் பாதிப்பின் வடுக்களையே தாங்கி நிற்கின்றது.

வன்னிவாழ் மக்களின் வாழ்வாதாரத்தில் தெங்குப் பொருளாதாரம் முக்கிய இடம் பெற்று நிற்கின்றது. பூநகரி, வட்டக்கச்சி, விசுவமடு என பல பிரதேசங்களில் வாழும் மக்கள் தமது வீட்டு வளாகத்தில் பயிரிடப்பட்ட தென்னைகள் மூலம் தமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக 20 -30 வரையான தேங்காய்களை சந்தையில் விற்பனை செய்துவிட்டு அதன் மூலம் பெறப்படும் வருமானத்தில் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்து வாழும் நிலையை இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் கொண்டிருந்தனர். யுத்த காலப் பகுதியில் தென்னந் தோட்டங்கள் அழிவுக்குள்ளாயிற்று . பின்னரான இன்றைய காலப்பகுதியில் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டுள்ளன. எனினும் மீண்டும் தெங்குப்பயிர்ச் செய்கைக்கு புத்துயிர்ப்பு அளிக்கப்பட்டு வருவதனைக் காண முடிகின்றது. அன்மைக் காலமாக முல்லைத்தீவு, விசுவமடு , பூநகரி ,பளை பிரதேசங்களிலிருந்து தென்னிலங்கைக்கு தேங்காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதனைக் காணமுடிகின்றது.

**பொருளாதாரத்தை உயர்த்தும்**

தென்னைப் பயிர்ச்செய்கையை நமது வடபுலத்தில் மேம்படுத்துவதற்கு மண் வளத்தை கருத்தில் எடுக்க வேண்டிய தேவை உள்ளது. தென்னைப் பயிர்ச்செய்கைக்கு உகந்த மண்வளம் மேற்காட்டிய அட்டவணையின் பிரகாரம் வடபுலத்தில் பற்றாக்குறையாக இருப்பதனால் மண்வளத்தைப் பெருக்கி அதனூடாக தென்னைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டியது காலத்துக்கு ஏற்ற பயனாக அமையும். தேங்காய்களை ஏற்றமதி செய்வதற்காக மாத்திரம் தென்னைப் பயிச்செய்கையின் முக்கியத்துவத்தை மட்டும் கருத்திற்கொள்ளாது எமது சிறு கைத்தொழில் முயற்சிகளையும் நோக்கவேண்டும்.

போருக்கு முன்னரான காலத்தில் வடபகுதியின் பெரும்பாலான இடங்களில் தும்புத்தொழிற்சாலை நிறுவப்பட்டு பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இந் நிலை இப்போது பெரும் பின்னடைவில் உள்ளது. இதைப்போன்று தென்னோலைத் தட்டிகள் (கிடுகு) பின்னுவதும் அவற்றை விநியோகிப்பதும். சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது அந்தச் செயற்பாடும் கைவிடப்பட்டுள்ளது. இவை குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி நின்றன. இன்று போரினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான குடும்பங்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்களாகவே காணப்படுகின்றன. இவர்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்தச்சவால்களை அவர்கள் வெற்றிகொள்ள இத்தகைய சிறு கைத்தொழில் முயற்சிகள் பெரும் பயனளிக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தேங்காய் எண்ணெய் உற்பத்தியாலைகள் நிறுவப்பட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தியிலும் நாம் தன்னிறைவு காண வேண்டிய தேவை உள்ளது. தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் வீதம் தமிழர் பிரதேசத்தில் வீழ்ச்சி கண்டுவருவதை புள்ளி விபரங்கள் எடுத்துரைக்கின்றன. தென்னைப் பயிர்செய்கையில் ஏற்படும் வீழ்ச்சியே இதற்கும் காரணமாக அமைகிறது.



வாழ்வாதார உயர்வு ,போருக்கு பின்னரான தமிழ் மக்களின் பொருளாதார நிலை, வறுமைக்கோடு எனப் பலவாறாகக் சிந்திக்க நமது புலமையாளர்கள் பொருளற்ற வார்த்தைகளாக இவற்றை உச்சாடனம் செய்துகொண்டிராது ,ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் இறங்க வேண்டும். தென்னைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதன் மூலம் ஓரளவுக்கேனும் எமது பொருளாதார நிலையை மேம்படுத்துவதுடன், வறுமைக் கோட்டில் சிக்கித்தவிக்கும் குடும்பங்களுக்கும் அவர்களின் நல்வாழ்வுக்கான விடியலின் திசையினையும் காட்டலாம்.

# மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு பாதிப்பில்லாது செயற்படுங்கள்

## புதிய எம்.பிக்களுக்கு சபாநாயகர் அறிவுரை

கொழும்பு, ஓக.28

மக்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு கொஞ்சமேனும் பாதிப்பு ஏற்படாதவகையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவுரை வழங்கியுள்ளார். ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருக்கும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு நாடாளுமன்றக் குழு அறையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளைத் திருத்திக் கொண்டு, மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும். பொதுத்தேர்தலின் மூலம் பல வருடகாலங்களுக்குப் பின்னர் பரிபூரணமான நாடாளுமன்றம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருக்கும் அனைவரும் கடந்த 5 மாதங்களாக பல்வேறு சவால்களுக்கும் பிரச்சி னைகளுக்கும் முகம் கொடுத்தே நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி வந்துள்ளனர். அதனால் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் தொடர்பாக சிறந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றே நாங்கள் நினைக்கின்றோம்.

நாட்டில் இதுவரை காலமும் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவே மக்கள் மிகப் பெரும் வெற்றியை எமக்குத் தந்திருக்கின்றனர். விசேட மாக அரசியலமைப்பில் பல முரண்பாடுகளை கடந்த காலங்களில் காணமுடிந் தன.

அவை அனைத்தையு தீர்த்துக்கொள்ள வேண்டி ருக்கின்றது. அதேபோன் எதிர்காலத்திலும் அவ்வ றானதுர்ப்பாக்கிய நிலை ஏற்படாதவகையில் நா கள் நடவடிக்கை எடுக் வேண்டும் எனத் தெரிவி தார். (வ-இ

## தொழில் கட்டளை சட்டங்களில் திருத்தம்

*தொழில் அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.28

தொழிலாளர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கத் தடையாக இருந்துவரும் தொழில் கட்டளைச்சட்டங்களில் இருக்கும் பல **வீனங்களை நீக்கி திருத்தங்க**ளைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளோம் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்துக்கு அமைவான பங்களிப்புத் தொகை வழங்காததால், வழக்குகளை தொழில் நியாயாதிக்க சபைக்கு அனுப்புவதற்குத் தேவையான முறையில் அந்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இருக்கின்றோம். தொழிற் சங்கங்கள் மற்றும் தொழிலாளர்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்த ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தற்போது செலுத்தப்பட்டுவரும் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா இழப்பீட்டை 20 லட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கும், இந்த இழப்பீட்டு வழக்கை விசாரணை செய்யும் அதிகாரத்தை தொழில் நியாயாதிக்க சபைக்கு ஒப்படைக்கத் தேவையான திருத்தங்களையும் கொண்டுவர இருக்கின்றோம் - என்றார். (ப)

# பிரச்சினைகளைத் தீர்க்க மக்களிடமே செல்லுங்கள்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

**கொழும்பு, ஓக. 28**



**மக்களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்றால் நாம் மக்களிடம் செல்ல வேண்டும். அப்போதுதான் அவற்றைத் தீர்க்க முடியும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராபக்ஷ தெரிவித்தார்.**

இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன்று மக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. இரண்டாவதாக அரச சேவை மீதுள்ள நம்பிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. இது நாட்டுக்கு நல்லதல்ல. இந்த இரண்டிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களுக்குச் சேவையை வழங்கும் அரசியல் கலாசாரமும் மக்கள் சேவை செய்யும் அரச சேவையையும் உருவாகும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

உண்மையில் நாம் மக்களிடம் செல்ல வேண்டும். மக்களின் பிரச்சினைகளை நாம் தீர்க்க வேண்டும். நான் தேர்தல் காலத்தில் மக்களிடம் சென்றபோது மக்கள் முன்வைத்த பிரச்சினைகள் மிகவும் சாதாரணமானவை. மிக சொற்பமானவையே அவர்களது தனிப்பட்ட விடயங்கள். நூற்றுக்கு சுமார் 70 வீதமானவை பொதுப் பிரச்சினைகள், போக்குவரத்து, வீதிகளை அமைப்பதற்கான கோரிக்கை, குடிதண்ணீர்ப் பிரச்சினை, காணி உறுதிகள் பற்றிய பிரச்சினை இவற்றைத்தான் அரசாங்கத்திடம் எதிர்பார்க்கிறார்கள்.

சில இடங்களுக்குச் செல்லும்போது அந்த மக்கள் நாம் பராமரித்து வந்த பண்ணைகள், பயிர் செய்த நிலங்கள், நாம் வாழ்ந்த இடங்களைத் திடீரென வனப் பாதுகாப்பு அதிகாரிகள் வந்து எல்லை இட்டுச் செல்வதாகக் கூறுகிறார்கள். இவ்வாறான சாதாரணமான பிரச்சினைகளை நாம் தீர்க்க வேண்டும். இவற்றுக்கு நடைமுறைச் சாத்தியமான வகையில் தீர்வுகளை வழங்க வேண்டும். வெறுமனே சட்டம் அல்லது சுற்றறிக்கைகள் அடிப்படையில் மட்டும் செயற்படுவது பொருத்தமானது அல்ல. மக்கள் எதிர்பார்ப்பது அதுவல்ல - என்றார். (ப)

*வடக்கு கிழக்கில்*

## தொல்பொருளைக் காக்க அச்சமின்றிச் செயற்படுக

*ஜனாதிபதி கட்டளை*

**வடக்கு கிழக்கு மாகாணங்களில் அழிவடைந்துள்ள தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு அதிகாரிகள் அச்சமின்றிச் செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்துள்ளார்.**

இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தொல்பொருள் துறையில் பெரும் பணிகளைச் செய்யமுடியும். இது மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்டதாகும். வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெருமளவு தொல்பொருள்கள் அழிவடைந்துள்ளன. இவற்றுக்கு விரைவாகத் தீர்வுகளைத் தேட முடியும். அவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அச்சமின்றிச் சரியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். சரியான தீர்மானத்தை மேற்கொள்ளப் பயப்பட வேண்டாம். பயமின்றித் தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள். அதற்கு நான் எனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன் - என்றார். (ப)

*வவுனியா மாவட்ட*

## காணி மத்தியஸ்தர் சபை செயற்பாடுகள் மீள ஆரம்பம்

வவுனியா,ஓக.28

வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அதன் தவிசாளர் இ.நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 அச்சம் காரணமாக விசேட காணி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் கடந்த மார்ச் மாதம் முதல் நிறுத்தப்ப ட்டிருந்தது.

தற்போது கொவிட் - 19 அச்சுறுத்தல் குறைவடைந்துள்ள நிலையில், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி விசேட காணி மத்தியஸ்தர் சபை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைவாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணியில் இருந்து மதியம் 1 மணி வரை வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் விசேட காணி மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் நடைபெறும்.

அதேவேளை செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களின் நன்மை கருதி, மாதத்தில் ஒன்றுவிட்ட இரண்டு சனிக்கிழமைகளில் செட்டிகுளம் பிரதேச செயலகத்திலும், வவுனியா வடக்கு மக்களின் நன்மை கருதி மாதத்தில் ஒன்று விட்ட இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் புளியங்குளம் இராமனூர் வித்தியாலயத்திலும் விசேட காணி மத்தியஸ்தர் சபை நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி செட்டிகுளம் பிரதேச செயலகம், 30 ஆம் திகதி இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை, எதிர்வரும் 6 ஆம் திகதி புளியங்குளம் இராமனூர் பாடசாலையிலும் விசேட காணி மத்தியஸ்தர் சபையின் காணிப் பிணக்குகள் தொடர்பான விசாரணைகள் நடைபெறும். அத்துடன் புதிய முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-18,110)

## பணியில் ஓய்வுபெறும் ஆசிரியைக்குப் பாராட்டு

தென்மராட்சி,ஓக.28



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றி, ஓய்வு பெறும் திருமதி ஞானாம்பிகை கனகராசா பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

நேற்றுடன் அவர் தனது 32 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது.

தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை, வலயத்தின் சேவா மங்கலம் திட்டத்தின் கீழ் விருதையும், ஓய்வூதியம் பெறுவதற்கான அனைத்து ஆவணங்களையும் ஆசிரியருக்கு வழங்கினார். (க-9)

## யானைப் பிரச்சினைக்கு ஓரிரு வருடங்களில் தீர்வு

கொழும்பு, ஓக. 28

யானைகளால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகளை ஓரிரு வருடங்களில் தீர்க்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு பணித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நான் இன்றுள்ள மக்கள் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை எதிர்பார்க்கிறேன். இவை செய்ய முடியுமானவையே. யானைகள் மனிதர்களின் மோதலை ஓரிரு வருடங்களுக்குள் முழுமையாகத் தீர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஒரு நோக்கத்துடன் ஒரு தீர்மானத்துடன் செயற்பட்டால் எமக்கு இதனைத் தீர்க்க முடியும். அத்தோடு அந்தப் பிரச்சினை முடிவுக்கு வரும் இல்லாவிட்டால் அது எந்தநாளும் உள்ள பிரச்சினையாக மாறி விடும் - என்றார். (ப)

## திமிரில் ஆடக்கூடாது அரசு

*எரான் விக்கிரமரத்ன எச்சரிக்கை*

கொழும்பு, ஓக. 28

தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மக்கள் பெற்றுக் கொடுத்துள்ளனர் என்று கூறிக்கொண்டு நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு அரசு முயற்சிக்கக் கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வெளிநாட்டவர்கள் இந் நாட்டை ஆட்சி செய்யும்போது ஏற்படும் சிக்கல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டே இரட்டைப் பிரஜாவுரிமை இருப்பவர்கள் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடியாது என்ற ஏற்பாடு 19ஆவது திருத்தத்தின் ஊடாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை மாற்றுவதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது. தங்களுக்குப் பெரும்பான்மை கிடைக்கப்பெற்றுள்ளது என்று குறிப்பிட்டு 'நாட்லுள்ள ஆண்கள் பெண்களைக் கொலை செய்யலாம்' என்ற ஒரு சட்டத்தை கொண்டுவருதற்கு அனுமதி வழங்க முடியுமா? - என்றார். (ப-இ)

### தமிழர்கள் விவசாயம் செய்யத் தடை;

# காணிகளுக்கு நேரில் சென்று பிரதேச செயலகத்தினர் ஆராய்வு

**முல்லைத்தீவு, ஓக. 28**

**முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் கமநல சேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட, அக்கரைவெளி வயல் காணிகளில் விவசாயம் செய்வதற்கு அரச திணைக்களங்கள், மற்றும் இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்ட தடைகள் தொடர்பில் நாளை சனிக்கிழமை ஆராயப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

முல்லைத்தீவு-கொக்குத்தொடுவாய் கமநல சேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட, அக்கரைவெளி வயல் நிலங்களைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த, அக்காணிகளுக்குரிய தமிழ் விவசாயிகள் மூவர் வனவளத் திணைக்களத்தினரால் கடந்த செவ்வாய்க் கிழமை கைதுசெய்யப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த அக்கரைவெளி வயல் காணிகளுக்குரியவர்களான, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், தென்னமரவடி ஆகிய பகுதிகளில் வசிக்கின்ற தமிழ் விவசாயிகள், நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் ஆகியோர் நேற்று முன்தினம் புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். கலந்துரையடலின் முடிவில் எதிர்வரும் சனிக்கிழமை (நாளை) இக் காணிப் பிணக்குத் தொடர்பில் ஆராயவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் காணி உத்தியோகத்தர்கள், மற்றும் உரிய அதிகாரிகள் கொக்கிளாய்க்கு வருகைதந்து, இக் காணிப் பிரச்சினைக்குரிய மக்களைச் சந்திப்பர் என்றும் அவ்வேளை அங்கு யாருடைய காணிகள் என்ற விவரங்களை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கும்படியும், அதற்குப் பிற்பாடு மீண்டும் இது தொடர்பில் ஓர் கலந்துரையாடலை ஒழுங்குசெய்து இந்த மக்களுக்கான பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ப-246)

# தமிழ்த் தேசியம் தோற்கவில்லை

### அடித்துக் கூறுகிறார் சி.வி.கே.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியம் எந்த வகையிலும் பின்னடைவைச் சந்திக்கவில்லை தமிழ்த் தேசியம் அதே நிலையில் தான் இருக்கின்றது என்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் தமிழ்த் தேசிய அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டோம் என தென்னிலங்கையில் சில அரசியல்வாதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றமை தொடர்பில் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவருமாக தமிழ்த் தேசியத்தை சார்ந்தவர்கள் தான் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆள்கள் மாறி இருக்கிறார்களே தவிர கோட்பாடுகள் அல்லது தமிழ்த் தேசியம் மாறவில்லை. தமிழ்த் தேசியம் சார்ந்து எல்லோரும் தொடர்ந்தும் போராடுவோம். விமல் வீரவன்ச கூறுவதைப்போல எமது தமிழ்த் தேசியம் தோற்றுவிட்டது அல்லது தோற்கடித்து விட்டோம் என்பது தவறு - என்றார். (ப-20)

### போர்க்...

இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்தில் மக்களுக்காகத் தனியான இரத்த வங்கியொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு உயர்ந்த சாதியினர், தாழ்ந்த சாதியினருக்கு இரத்தம் வழங்கத் தயங்கும் நிலையில் இராணுவத்தினர் அவர்களுக்கு இரத்தம் வழங்குகின்றனர். இவ்வாறான நிலைமையில் விக்னேஸ்வரனுக்கும், கஜேந்திரகுமாருக்கும் தமிழ் மக்கள் பற்றிப் பேசுவதற்கு எந்த உரிமையும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதிய அரசின் இடைக்காலக் கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முப்பது வருட போர் முடிவடைந்து சில வருடங்களுக்கு முன்னரே நமது நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் இந்த நாடாளுமன்றத்துக்குள் யாரேனும் அமைதியைச் சீர்குலைத்து மீண்டும் போரை உருவாக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுவார்களாக இருந்தால், தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் குரோதத்தை அதிகரிக்கும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவார்களாக இருந்தால் , தமிழ் இளைஞர்களை மீண்டும் சுயநிர்ணயத்தின் பக்கம் ஊக்கப்படுத்தும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவார்களாக இருந்தால் அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இதில் ஏமாற்றமடைந்து மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கினால் இடைக்காலக் கணக்கறிக்கை போன்று ஆயிரம் மடங்கு நிதியைப் பாதுகாப்புக்காக ஒதுக்க வேண்டி வரும்.

கட்சித் தலைவர் ஒருவர் மொழியை முன்னிலைப்படுத்தி உரையாற்றியுள்ளார். எமது நாடு 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட நாடே. அதையும் தாண்டிய பாரம்பரிய வரலாறுகளும் உள்ளன. இந்த நாட்டில் நாகரிகத்தைக் கட்டியெழுப்பியது சிங்களவர்களே என்பது இந்த நாட்டின் தொல்பொருள் மற்றும் கல்வெட்டுகளின் மூலம் தெரியவருகின்றது. இவ்வாறான வரலாறுகளைத் தெரிந்துகொண்டே பொருத்தமற்ற கருத்துக்களை வெளியிடுவதை நாங்கள் கண்டிக்க வேண்டும்.

இதேவேளை, குறித்த கட்சித் தலைவர் சுயநிர்ணயம் தொடர்பாகக் கதைத்துள்ளார். சுப்பர் மார்க்கட்டுக்கு அம்மாவுடன் செல்லும் குழந்தை லொலிபப் கேட்பதைப் போன்றே அது உள்ளது. வடக்குக்கு சுய நிர்ணயம் வழங்கப்பட்டால் தெற்கிலுள்ள தமிழ் மக்களின் நிலை என்னவாகும்?

அந்தக் கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கில் முக்கிய பதவியில் இருந்தவர் என்பதுடன் கொழும்பில் றோயல் கல்லூரியில் பயின்றவர். அத்துடன் சிங்களவர்களுடனேயே நீதிமன்றத்தில் பணியாற்றியுள்ளார். அவர் 65 வருடங்களாகசிங்களவர்களுடனும் முஸ்லிம்களுடனுமே வாழ்ந்திருக்கின்றார். இவ்வாறாக இருந்து கொண்டு வடக்குக்குச் சென்று சிங்களவர்களுக்கு எதிராகப் பேசுகின்றார்.

அவர் சிங்கள மொழிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றார். புத்த மதத்தை அவமதித்துகிளிநொச்சியிலுள்ள புத்தர் சிலையை அகற்ற வேண்டும் என்று பேரணியும் சென்றுள்ளார்.

அந்தக் கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வேறு யாருமல்ல விக்னேஸ்வரனே ஆவார். இவர் முள்ளிவாய்க்காலுக்குச் சென்று சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். முள்ளிவாய்க்கால் என்பது பயங்கரவாதிகளின் கடுமையான போராட்டம் நடைபெற்ற இடமே. அங்கேயே பயங்கரவாதிகள் உயிரிழந்தனர். பயங்கரவாதிகள் ஈழத்துக்காகவே போராடினர். அவ்வாறான இடத்துக்குச் சென்று சத்தியப்பிரமாணம் செய்து பிரிவினைவாத நிலைப்பாட்டிலேயே அவர் இருக்கின்றார். இது தொடர்பாக அவரிடம் விளக்கம் கேட்க வேண்டும். அத்துடன் மனுஷ நாணயக்கார கூறுவதைப் போன்று விக்னேஸ்வரனின் இனவாதக் கருத்து ஹன்சாட்டில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம்.

எமது இராணுவம் தமிழ் இனப்படுகொலையைச் செய்துள்ளது எனக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் வாக்குகள் கிடைக்காமைக்கு அதுவே காரணம் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், போர் முடிவடைந்து சிறிது காலத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட இந்த இனப் படுகொலையை செய்ததாகக் கூறிய இராணுவத்துக்குத் தலைமைத்துவம் வழங்கிய சரத் பொன்சேகாவுக்கு எந்தளவு வாக்குகள் கிடைத்தன? இதனால் அவரின் கருத்துக்களைக் கணக்கில் எடுக்க வேண்டியதில்லை. எமது இராணுவம் போர்க்குற்றங்களைச் செய்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். போர்க்குற்றங்கள் தொடர்பான 6 விசேட நிபுணர்கள் எந்தவிதமான போர்க்குற்றங்களும் இங்கு இடம்பெறவில்லை என்று தெரிவித்துள்ளனர். என்றார். (எ-22)

# நிச்சயம் நாடாளுமன்று செல்வார் ஞானசாரர்!

சட்ட வழிமுறைகள் ஊடாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரரை நிச்சயம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைப்போம் என அபேஜன பலவேகய கட்சியின் பொதுச் செயலாளர் நிஷாந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேசியப் பட்டியல் விவகாரத்தில் கட்சியின் செயற்குழுவின் தீர்மானங்கள் செல்வாக்குச் செலுத்தும். பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்பதே அபேஜனபல வேகய கட்சிக்கு ஆதரவு வழங்கிய 67 ஆயிரம் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. யாருக்குத் தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் அத்துரலியே ரத்ன தேரருக்குக் கிடையாது - என்றார். (ப-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 08 . 1930



இறப்பு 25 . 08 . 2020

### திருமதி இராமசாமி மனோன்மணி

கொக்குவில், நந்தாவில் அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில், கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராமசாமி மனோன்மணி கடந்த (25.08.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை, சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புத்திரியும், காலஞ்சென்ற செல்லையா, அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையா இராமசாமியின் அன்பு மனைவியும், இரத்தினகுமாரசிங்கம் (சுகந்தன்-கனடா), இரஞ்சன், சுகனியா, லோகன் (கனடா), சுதேகி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தமலர், சித்ரா, பாமகாந்தன், ராகினி, லோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பரராஜசிங்கம், ராஜேஸ்வரன், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.08.2020 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : இரஞ்சன் - 0777 183 980
சுகனியா - 0777 575 364

# உலகம் முழுவதும் கட்சியின் கிளைகள்

தமது கட்சியின் கிளைகளை உலகம் முழுவதும் அமைக்கவுள்ளார் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

## கருணாவின் பேராசை

அத்துடன், நடந்து முடிந்த தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகாவ ட்டாலும் தான் வெற்றிபெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரிவித்ததாவது;
நான் வெற்றிபெற்று நாடாளுமன்றம் செல்லவில்லை என நினைக்க வேண்டாம். நான் வெற்றி பெற்றுள்ளேன். எனது விருப்பு வாக்கை விடக் குறைந்த வாக்குகளைப் பெற்றே சம்பந்தன் உள்ளிட்டோர் நாடாளுமன்றம் சென்றுள்ளனர். வடக்கு, கிழக்கு மக்கள் இன்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை தூக்கி வீசியிருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பின்னால் எமது மக்கள் சென்றால் இன்னும் தமிழ்ச் சமூகம் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் - என்றார். (ப-இ)


புடைவை விற்பனை நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் புடைவை விற்பனை நிலையத்திற்கு புடைவை விற்பனை செய்யக்கூடிய பெண் தேவை.
சம்பளம் - 15.000 - 20.000
தொடர்பு: 076 3063 306



தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள மேசன் வேலை, சட்டரிங் வேலை, கம்பி வேலை செய்யக்கூடிய மேசன் ஒப்பந்தகாரர் தேவை.
077 592 5371, 077 985 1946


## தமிழரசு...

தேர்தலில் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு, கட்சியின் தலைமைக்குத் தெரியாது தன்னிச்சையாக முடிவெடுத்து நியமனம் வழங்கியதைக் கண்டித்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரவுள்ளோம்" என்று நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைமுன்வைப்பவர்களில் ஒருவரான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், கட்சியின் பொருளாளர் கனகசபாபதி, யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பரஞ்சோதி மற்றும் குகபாலன் ஆகியோர் இணைந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைக்க வுள்ளனர்.

இது தொடர்பாக சி.வீ.கே. சிவஞானம் மேலும் தெரிவித்ததாவது

தேசியப் பட்டியல் நியமனத்தில் கட்சியின் தலைவர் தன்னிச்சையாகச் செயற்பட்டிருந்தார். கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவுக்குத் தெரியப்படுத்தாமலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்குத் தெரியப்படுத்தப்படாமலும், தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இது கட்சிக்குள்ளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் முரண்பாடுகயைத் தோற்றுவித்துள்ளது. இந்தத் தன்னிச்சையான செயற்பாட்டுகளைக் கண்டித்து மத்திய குழுக் கூட்டத்தில் கட்சியின் செயலாளருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவுள்ளோம். என்றார்.

கடந்த நாடாளுமன்றத்தேர்தலில் கிடைத்த தேசியப் பட்டியலுக்கான நியமனம் நாவிதன்வெளி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் தே.கலையரசனுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடனும், எவருடனுடனும் கலந்துரையாடாது ஒரு சிலரின் கருத்துக்களுக்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று விமர்சிக்கப்படுகின்றது. (ஏ)


சிவமயம்

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 31.07.2020 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர் கணபதிப்பிள்ளை துரைசிங்கம்
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வேணை சாட்டி வெள்ளைக்கடற்கரை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 30.08.2020 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
முக்கொம்பன், செக்கால வீதி, நேரடம்பன்.
தொ.பே: 0770480667 0774747550



நாகபூஷணி திருமணசேவை இடமாற்றப்பட்டுள்ளது

இல.5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (பேபி ஸ்ரூடியோவுக்கு அருகில் உள்ளலேன்)
நீங்கள் விரும்பும் அரச, தனியார்துறை உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு.
மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக்கொள்ளலாம்.
077 138 7596, 071 999 9306



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்
சின்னப்பு பிள்ளையினான்
(ஐயாத்துரை - சாவகச்சேரி)



கடந்த 27.07.2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தந்தை சின்னப்பு பிள்ளையினான் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (28.08.2020) வெள்ளிக்கிழமை எமது இல்லத்திற்கருகிலுள்ள ஸ்ரீ ஞான வைரவர் (கொட்டடி வைரவர்) ஆலய மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு 03.06.1928
உதிர்வு 27.07.2020

குடும்பத்தினர்.
இல.348, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.



க.பொ.த (உயர்தரம்) 2020 பரீட்சைகள்
பொருளியல் பகுதி 1 கருத்தரங்கு

பிரபல பொருளியல் விரிவுரையாளரும், பல வருட பரீட்சை புள்ளியிடல் அனுபவமும் கண்டி புனித திருத்துவ கல்லூரி ஆசிரியருமான
திரு. N. சிறிகுமார் BA (Hons) Econ Spc, MA, Econ, Dip in Edu)
ஒரே நாளில் 150 மாதிரி பகுதி 1 பல்தேர்வு வினாக்களின் விரிவான விளக்கத்துடனான மீட்டல்

இடம்: Institute Of Business Management No.1, 2nd Lane, Power House Road, Jaffna.
காலம்: 1 ம் திகதி செப்டம்பர் 2020 காலை 9.00 மணி முதல் 4.00 மணி வரை

உங்கள் திறமைச்சித்தியினை உறுதிப்படுத்த அரிய சந்தர்ப்பம்
மேலதிக விபரங்களுக்கு
IBM INSTITUTE OF BUSINESS MANAGEMENT
No. 1, 2nd Lane, Power House Road, Jaffna.
0212227770, 0777633915



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் ஏகாம்பரம் கந்தசாமி



மண்ணில் 14.09.1950
விண்ணில் 09.09.2019
திதி:வளர்பிறை ஏகாதசி (28.08.2020)

ஆண்டுகள் ஒன்று ஆனதென்று
அழுதிங்கு புலம்புகின்றோம்
கோடி ஆண்டுகள் ஓடி இங்கு
- போனாலும்
அழியாது என்றென்றும்
அழகான உன் நினைவலைகள்

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாறுசந்தி, அல்வாய் தெற்கு, அல்வாய்.
குடும்பத்தினர்.



28.08.2020 அரச சேவையில்
மணிவிழா காணும் எமது ஆசானை வாழ்த்துகின்றோம்




துரைராஜசிங்கம் இராஜன்
எமக்கு குருவாகவிருந்து பல மாணவர்களை உருவாக்கிய மிருதங்க வித்துவான் துரைராஜசிங்கம் இராஜன் அவர்கள் தமது அரச நற்பணியில் இருந்து மணி விழா காண்பதையிட்டு பாராட்டுவதுடன் கலைத்துறைக்கு மேலும் அதிக பங்கு ஆற்றவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரியமான மாணவர்கள் க.உதயகுமார்

# INVITATION FOR BID
## CENTRAL ENGINEERING SERVICES (PVT) LTD.
## SUPPLY OF READY MIX CONCRETE

CONTRACT (BID) No.: My No. CS/COE (N) PROC/BD-624

1. The Chairman, Base Procurement Committee (BPC) of the Central Engineering Services (Pvt) Ltd invites sealed bids from eligible and qualified Local Suppliers for *"Supply of Ready mix Concrete for The Construction of Town Hall at Jaffna"*.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
**Details of Procurement**
   - **Name of Procurement** – *Supply of Ready mix Concrete for The Construction of Town Hall at Jaffna BD-624*
   - **Date of Bid Closing** – *14.09.2020*

3. Qualified Suppliers shall possess legal rights for the above Procurements. The Supplier shall produce a copy of the Certificate of Registration of a Business Firm (Foreign Suppliers are not allowed to Bid). The Suppliers shall not have a conflict of interest and Supplier's name shall not be included in the list of debarred firms at the National Procurement Commission. Additional details are provided in the Bidding Document.

4. A complete set of Bidding Documents in English language may get by interested Suppliers from Procurement Division, Office of Chief Operation Engineer (North), Central Engineering Services (Pvt) Ltd, 155th Mile Post, Kandy Road, Iranamadu, Kilinochchi on submission of a written application to the SOE **from 8.30 a.m to 5.00 p.m on any working days from 28.08.2020 up to 13.09.2020 only a single set of Bidding Document will be issued.**

5. Bids shall be kept at the Tender Box placed at the Procurement Division, Office of *Chief Operation Engineer (North), Central Engineering Services (Pvt) Ltd, 155th Mile Post, Kandy Road, Iranamadu, Kilinochchi on or before 2.00 p.m on 14.09.2020* or Bids may be sent by the registered post to reach the above address before the closing time of Bids. All late Bids shall be rejected. Bids will be opened soon after closing in the presence of the Supplier's representatives, who choose to attend in person at Office of Chief Operation Engineer (North), Central Engineering Services (Pvt) Ltd, 155th Mile Post,Kandy Road, Iranamadu, Kilinochchi.

6. Bids shall be valid until 91 days from the Bid submission date.

7. The decision taken by the Base Procurement Committee (BPC) will be the final decision and the BPC reserves the right to make any amendments.

8. For further clarifications, please contact; ***Mr.A.Sathyadasan (SOE-North) 077-2320354***
**Address :-** *Central Engineering Services (Pvt) Ltd, 155th Mile Post, Kandy Road, Iranamadu, Kilinochchi. Tel: 021-2285486, Fax: 021-2283850. E Mail: procu.ceslnorth@gmail.com*

**Chairman,**
**Base Procurement Committee,**
**CESL – North**
**Kandy Road,Iranamadu,Kilinochchi.**
**Tel:-021-7200762, 021-2285486 Fax:-021-2283850**

## நாஹூா மருத்துவ நிலையம்

கை, கால் செயலிழப்பு, பாரிசவாதம்,
மூட்டுக்கள் தேய்வு முழங்கால்வாதம்,
மாறாதபுண்கள், அல்சர்- சிறப்புச் சிகிச்சை

வங்கிழன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி
(ஜெகபதிவீடு), மானிப்பாய்.

077 321 2740

## காணி விற்பனைக்கு

கொக்குவில் இந்து பாடசாலைக்கு
அண்மையில் 3 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**077 668 1670**

# மரண அறிவித்தல்

## திருமதி ஞானாம்பிகை இராசையா



மலர்வு 31.03.1930 உதிர்வு 25.08.2020

நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை இராசையா 25.08.2020 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசயரத்தினம் இராசையா (நில அளவை அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - விசாலாட்சி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான விசயரத்தினம் - சொர்ணம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான சுரேந்திரன், V.C. பரமநாதன் ஆகியோரின் சகோதரியும், சதானந்தி (கனடா), காலஞ்சென்ற சசி மற்றும் பவானி, சஜீவி ஆகியோ ரின் அன்புத் தாயும், பாபு, உதயணன் (கனடா), குமரன் ஆகியோரின் அன்பு மாமியும், சாயிவிபூஷி, சாயீஷன் ஆகியோரின் அருமை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.08.2020 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 021 4757**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 05 • 05 • 1943



**மறைவு** 21 • 08 • 2020

## திருமதி இரஞ்சிதாதேவி பாலசுப்பிரமணியம் (மலர், ரஞ்சி)

(Format Acct. Polytechnic – வெள்ளவத்தை)
(Acct. – U.K and Ranji Teacher _ Walthomstow U.K)
( Walthomstow ஸ்ரீமேருபுரம் மஹா பத்திரகாளி அம்மன் ஆலய உறுப்பினர்)

அரியாலையை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சிதா தேவி பாலசுப்பிரமணியம் (மலர்) கடந்த (21.08.2020) வெள்ளிக்கிழமை லண்டனில் இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-பொன்னம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன்-சரஸ்வதி தம்பதியினரின் மருமகளும், பாலசுப்பிரமணியத்தின் (U.K) மனைவியும், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, உமாராணி மற்றும் உருத்திரேஸ்வரன், பொன்மதி (புஸ்பம்), விஜயேந்திரன் (U.K) ஆகியோரின் சகோதரியும், சந்திரா (கனடா), காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சட்டத்தரணி - பதில் நீதிவான் விஜியராணி (பருத்தித்துறை), சிவாஜினி (U.K), பாலகிருஷ்ணன், பாலேந்திரன்(U.K), பாலச் சந்திரன் (U.K), ஜெயலட்சுமி(U.K), பாக்கியலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், உமாகாந்தன் (கனடா), கஜனி(U.K), நளினி(U.K) ஆகியோரின் சிறிய தாயாரும், கனடா வாழ் சிவகுமார், நந்தகுமார், சிவகாமி, ஆதவன்(U.K), ஆதர்சா(U.K) மற்றும் ராஜ்பால் (பொடி-U.K) கோடீஸ்வரன் (U.K) கனடா வாழ் கௌரி, மதுரா, சமிந்தா, பிரசல்ஜா ஆகி யோரின் மாமியாரும், கனடா வாழ் சேயூரன், சேயோன், செந்தாளன், வேதா, நந்திகா, வீரா, ஏரன், அஞ்சலி, உதர்சா சாங்கரி(U.K), ஹரிஸ் (U.K), நிமேஸ்(U.K), ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 214-BlackHorse Lane Walthomstow இல்லத்தில் 30.08.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி முதல் 10மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**விஜயேந்திரன்** (U.K) (00442084279808)
**உமாகாந்தன்** (கனடா) (0014165054008)
**கஜனி ராஜ்பால்** (U.K) (00442089513676)
**நளினி கோடீஸ்வரன்** (U.K) (00447415241695)
**சிவகுமார்** (கனடா) (001416802315)

**உருத்திரேஸ்வரன்** (+94776999319)
**பொன்மதி(புஸ்பம்)** (+94767594981)

125/2, A.V றோட், அரியாலை.
பாலகிருஷ்ணன் (0212227753)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## கோப்பாய் உப அலுவலகம்
## ஆதனப்பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 14, டச்சு வீதி, ஆதன இலக்கம் 189 / 7 என்ற இலக்கத்தை கொண்டதும் "வண்ணான் கடவை" நிலப்பரப்பு மொத்தப்பரப்பு 10 குளி 1.80 கொண்ட கிராமசேவையாளர் பிரிவு : J/259, கோப்பாய் கோவில் பற்று கோப்பாய் தெற்கு இறை, கோப்பாயில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் பெயர் சிவஞானம் சிவக்கொழுந்து என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தின் வரைபடத்திற்கமைய காணித்துண்டு 02 இனை 116, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை சேர்ந்த தம்பித்துரை ஜெயசீலன் மனைவி ஸ்ரீவிஜயகௌரி (720611155V ) என்பவர், நிலப்பரப்பு 02 குளி 00 இற்கு உரிமை கோருகின்றார். (வரைபட இல: 5392B/13)

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு திரு.கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட 9198 ஆம் இலக்க 06.11.2013 ஆம் திகதிய காணி அறுதி உறுதி மூலம் தம்பித்துரை ஜெயசீலன் மனைவி ஸ்ரீவிஜயகௌரிக்கு தடையற்ற ஆட்சியுமானதென கிரயமாக வந்தடைந்தது.

மேற்படி நிலப்பரப்பு பரப்பு 02 குழி 00 இற்கு எல்லை கிழக்கு குணரத்தினம் இராமச்சந்திரனிற்கு உரிய ஆதனமாகும். எல்லை வடக்கு இதன் மிகுதி ஆதனம் (துண்டு 1), மேற்கு துண்டு 4 எனக்குறித்த பாதை நிலம், தெற்கு நிலம் துண்டு 3 எனக்குறித்த தம்பித்துரை ஜெயசீலன் மனைவி ஸ்ரீவிஜயகௌரிக்குரியதும் துண்டு 4 எனக்குறித்த பாதைக்குரிய ஆதனமுமாகும். இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபை அவர்களால் அளந்து வரையப்பட்ட 5392B/13 ஆம் இலக்க 24.09.2013 ஆம் திகதிய வரைபடத்தில் குறித்து காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தை தம்பித்துரை ஜெயசீலன் மனைவி ஸ்ரீவிஜயகௌரி என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 27.09.2020 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது தம்பித்துரை ஜெயசீலன் மனைவி ஸ்ரீவிஜயகௌரி என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சனைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப் பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர்.**
**28.08.2020**

# வவுனியா பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## பதிவுத் திகதி 1971.01.09 பதிவு இல VA/260
## கீழ் வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி:- கிராமிய வங்கி முகாமையாளர்**

சம்பளக்குறி இல- 205/09 4/2018 இன் படி சம்பள அளவுத்திட்டம்
**:- 18010 – 220 x 10- 230x 10 -22510**

**கல்வித் தகைமை:-**

அ) .கூட்டுறவு பணியாளர் 10வது சம்பளத்திட்ட கிராமியவங்கிப் பகுதி பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவு பணியாளர் 11வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) இலங்கை வங்கியாளர் நிறுவன வங்கி அலுவல்கள் பற்றிய பரீட்சையில் டிப்ளோமா சான்றிதழ் பகுதி- 1 உடன் வங்கி அலுவல்கள் பற்றிய மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ). அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் வர்த்தக வங்கி அலுவல்கள் பற்றி இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஈ).கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் வங்கி பகுதி அல்லது கிராமிய வங்கிப் பகுதி மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**2. பதவி:- உற்பத்தி முகாமையாளர்**

சம்பளக்குறி இல- 107/10 4/2018 இன் படி சம்பள அளவுத்திட்டம்
**:- 17605-198 x10 - 220 x10-21785**

**கல்வித் தகைமைகள்:-**

அ).கூட்டுறவு பணியாளர் 11வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையிலான முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 12வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ).அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் வர்த்தகம் அல்லது வியாபார நிர்வாகம் அல்லது பொருளியல் ஆகியவற்றில் விசேட பட்டம் அல்லது அதற்கு சமனான தகமைகள்

அல்லது

இ). கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவன மொன்றின் உற்பத்தி துறை சந்தைப்படுத்தல் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**3. பதவி :- களஞ்சிய முகாமையாளர்**

சம்பளக்குறி இல :- 208/12 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:-16780 – 150 x 10- 165 x 10-19930**

**கல்வித் தகைமை:-**

அ) கூட்டுறவு பணியாளர் 13வது சம்பளத்திட்டத்தில் களஞ்சியப்பொறுப்பாளர் அல்லது கிளை மேற்பார்வையாளர் அல்லது கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த் உயர் தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் களஞ்சிய முகாமை தொடர்பாக ஆகக் குறைந்ததது 01 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் சாதாரண தரராதப்பத்திரம் அல்லது க.பொ.த சாதாரணதரப் பத்திரம் அல்லது தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் அல்லது வர்தத்க எண்கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது கணிதம் உடன் சிங்களம் அல்லது தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 4 திறமைச்சித்தியுடன் கூடிய 6 பாடங்களுடனான சித்தியுடன் கிளை நிலையம் ஒன்றின் நிர்வாகம் தொடர்பான பதவியில் ஆகக் குறைந்தது 4 ஆண்டு கால அனுபவம்.

**4. பதவி :- களஞ்சிய முகாமையாளர்**

சம்பளக்குறி இல :- 208/13 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:-16365 – 140 x 10- 150 x 10 -19265**

**கல்வித் தகைமை:-**

அ) கூட்டுறவு பணியாளர் 14வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறை பதவியொன்றில் இரண்டு(02) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறை பதவியொன்றில் நான்கு(04) வருடங் களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு(06) பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறை பதவியொன்றில் இரண்டு(02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**5. பதவி :- எழுதுவினைஞர்**

சம்பளக்குறியீடு :- 302/13 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:-16365 - 140x 10- 150x 10- 19265**

**கல்வித் தகைமை:-**

அ). கூட்டுறவு பணியாளர் 14வது சம்பள அளவுத்திட்டத்தில் எழுதுவினைஞர் பதவி யொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவு பணியாளர் 15வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு(04) வருடங் களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) க.பொ.த. (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச்சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**6. பதவி :- எழுதுவினைஞர்**

சம்பளக்குறி இல :- 302/15 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:-15545-130x10-140x10-18245**

**கல்வித்தகமை:-**

அ). கூட்டுறவு பணியாளர் 16வது சம்பள அளவுத்திட்டத்தில் எழுதுவினைஞர் பதவி யொன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரம் அல்லது க.பொ.த.சாதாரணதரப் பத்திரம் அல்லது தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளில் மேற்படாது எண் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது கணிதம் உடன் சிங்களம் அல்லது தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 6 பாடங்களுடனான திறமைச்சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**7. பதவி :- எழுதுவினைஞர்**

சம்பளக்குறி இல :- 302/16 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:-15135-120x10-135x10-17685**

**கல்வித் தகைமை:-**

அ) க.பொ.த. (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தி.

**8. பதவி:- கிராமிய வங்கி எழுதுனர்**

சம்பளக்குறி இல :- 300/12 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:- 16780-150x10-165x10-19930**

**கல்வித் தகைமை:-**

அ). கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் 2 வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப் படுத்தும் அனுபவச்சான்றிதழ் பெற்றிருத்தல். அல்லது 14வது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் 4வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச்சான்றுதல் பெற்றிருத்தல்.

அல்லது

ஆ).கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பத்திரம்/ க.பொ.த.உயர்தரத்தில் 3 பாட சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 3 மாதங்களுக்குக் குறையாத MS Office கற்கை நெறியை அல்லது அதனை ஒத்த கணனி கற்கை நெறியினைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் அத்துடன் 3 வருட கணனி தொடர்பான அனுபவம்.

அத்துடன்

இ). (அ) அல்லது (ஆ) தகைமைப் பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கிராமிய வங்கியில் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**9. பதவி:- எரிபொருள் நிரப்புனர்**

சம்பளக்குறி இல- 313/16 4/2018 இன் படி சம்பள அளவுத்திட்டம்
**:- 15135-120x10-135x10-17685**

**கல்வித் தகைமை:-**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ). 8ம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.

**10. பதவி :- விற்பனை உதவியாளர்**

பதவி இல/சம்பளக்குறியீடு :- 308/17 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:- 14725 -115x10 -130x10 -17175**

**கல்வித் தகைமை:-**

(அ) கூட்டுறவு பணியாளர் கனிஸ்டதரச்சான்றிதழ்.

அல்லது

(ஆ) 8ம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**11. பதவி :- அலுவலக உதவியாளர்**

பதவி இல/சம்பளக்குறியீடு :- 317/16 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:-15135-120x10-135x10-17685**

**கல்வித்தகைமை:-**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவத்துடன் 5ம் வகுப்பு கல்விச்சான்றிதழ்.

அல்லது

(ஆ) 8ம் வகுப்பு கல்விச்சான்றிதழ்.

**12. பதவி :- சாரதி**

பதவி இல/சம்பளக் குறியீடு :- 312/15 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:-15545 -130 x 10- 140 x 10- 18245**

**கல்வித்தகைமை:-**

(அ) 5ம் வகுப்பு கல்விச்சான்றிதழும் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

**13. பதவி :- லொறி சுத்திகரிப்பாளர்**

பதவி இல/சம்பளக்குறியீடு :- 314/16 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:-15135 -120 x 10- 135x 10- 17685**

**கல்வித்தகைமை:-**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) 5ம் வகுப்பு கல்விச்சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

**14. பதவி :- காவலாளி**

பதவி இல/சம்பளக்குறியீடு :- 315/16 4/2018 இன்படி சம்பள அளவுத்திட்டம்
**:-15135-120 x 10-135x10-17685**

**கல்வித்தகைமை:-**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) 5ம் வகுப்பு கல்விச்சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் ,ருத்தல் வேண்டும்

**01 தொடக்கம் 14 வரையான பதவிகளுக்குமான பொதுவான நியந்தனைகள்.**

1. பதவியின் தன்மை – நிரந்தரமானது.
2. வயதெல்லை – 18 -45 (தற்போது சேவையில் உள்ள கூட்டுறவு ஊழியர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.)
3. விண்ணப்படிவத்தை பூரண தகவல்களுடன் சுயமாக தயாரித்து இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.
4. கூட்டுறவுச் சங்கமொன்றில் வெற்றிடம் நிரப்புவுதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக் கும் போது பிறிதொரு கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றுபவரின் விண்ணப்ப மானது உரிய சங்கத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. அத்துடன் எவரேனும் ஒருவர் கூட்டுறவுச்சங்கத்தில் சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணப்பத்தினை சம்ர்ப்பித்துள்ளார். என அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரிய வருமேயாயின் பதவி இழப்பதற்கு அது ஒரு காரணமாக அமையும்.
6. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித்திகதி – 11.09.2020
7. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி –
   **தலைவர்**
   **வ.ப.நோ.கூ.சங்கம்,**
   **பொதிமண்டப வீதி, வவுனியா.**
8. ஊழியர்க்கான சலுகை :- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக இதர படிகள் இயக்குனர் சபைத்தீர்மானத்திற்கு அமைவாக வழங்கப்படும்.

**தலைவர்**
**வ.ப.நோ.கூ.சங்கம்,**
**வவுனியா**

## விக்கியின்...

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனின் நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்றுப் போர்க்கொடி தூக்கினார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் 9ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில், தமிழ் மொழி உலகின் மிகப் பழமையான மொழி, இலங்கையின் முதல் பழங்குடியினரின் மொழி என்று குறிப்பிட்டிருந்தார். சி.வி.விக்னேஸ்வரனின் உரைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

சி.வி.விக்னேஸ்வரனின் உரையை நாடாளுமன்ற ஹன்சார்ட்டில் இருந்து நீக்க வேண்டும் என்று அவர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் அதை நிராகரித்த சபாநாயகர் அந்த உரையை ஹன்சார்ட்டில் சேர்க்க அனுமதித்தார்.

நேற்று நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்ற நிலையில், சி.வி.விக்னேஸ்வரனின் உரையை ஹன்சார்ட்டில் சேர்ப்பது என சபாநாயகர் எடுத்த முடிவு தொடர்பாக மனுஷ நாணக்கார கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர் அபேவர்த்தன, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கருத்துரிமை உள்ளது என்று தெரிவித்தார்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

பிரிவினைக்கு எதிராக 6ஆவது திருத்தத்தில் கீழ் சத்தியப்பிரமாணம் செய்துவிட்டே நாடாளுமன்ற உறுப்பினராகின்றனர். சத்தியப்பிரமாணம் செய்த உடனேயே சி.வி.விக்னேஸ்வரன் அதை மீறிவிட்டார். அவரது பதவியைப் பறிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அதன்போதும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் கருத்துரிமையை சபாநாயகர் சுட்டிக்காட்டினார். இது ஒரு ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்றும் தெரிவித்தார்.

அதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சல் இட்டு அமைதியின்மையை ஏற்படுத்தினார்கள். (எ)

## யாழ்.பல்கலை...

வால் சிரேஷ்ட பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கடந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் துணைவேந்தர் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது.

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குத் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான புதிய நடைமுறைகள் அடங்கிய சுற்றுநிருபம் கடந்த மே மாத முற்பகுதியில் வெளியிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்காக மே 15 ஆம் திகதி பதிவாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் இருந்து - சுற்றறிக்கைக்கு அமைய இடம்பெற்ற மதிப்பீடுகளின் படி, கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற விசேட பேரவை அமர்வில் வைத்து திறமை அடிப்படையில் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, பேராசிரியர் கு. மிகுந்தன், பேராசிரியர் த. வேல்நம்பி ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டு, அவர்களின் விவரங்கள் ஜனாதிபதியின் தெரிவுக்காக அனுப்பப்பட்டிருந்தன.

பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையின் அடிப்படையில், மூவரினது பெயர்களையும் கடந்த 13 ஆம் திகதி பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வி அமைச்சுக்கு அனுப்பியிருந்தது.

பல்கலைக்கழக கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றின் பரிந்துரைகளுடன் கிடைத்த மூன்று பெயர்களில் இருந்து, பல்கலைக் கழகப் பேரவை மதிப்பீட்டின்படி முதல் நிலையைப் பெற்றிருந்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜாவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமித்துள்ளார். (எ)

## காணி...

வயல் முருகன் கோயிலடியில் திரள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 18 ஏக்கர் நன்னீர் வளக் காணிகளைக் கையகப்படுத்தக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து அந்த முயற்சி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது மீண்டும் கடற்படையினர் காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இன்று முகப்புவயல் முருகன் கோயிலடி பகுதியில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பொதுமக்களும், கட்சி பேதங்கள் இன்றி அரசில்வாதிகளும் திரண்டு இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## வெடி...

நேற்றிரவு கொண்டாடினர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தராக எஸ். சிறிசற்குணராஜா தெரிவானதை அடுத்தே மாணவர்கள் இந்தக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவை தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டிருந்தன. (எ)

## தவறான...

இ.கணபதிப்பிள்ளை (வயது57) என்பவரே உயிரழந்துள்ளார். ஓலைத்தொடுவாயில் உள்ள அவரது தோட்டத்தில் உள்ள கொட்டகையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்ப முரண்பாடு காரணமாக இவர் தவறான முடிவை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஏ.றொஜன் விசாரணைகளை மேற்கொண்டார். சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட திடீர் இறப்பு விசாரணை அதிகாரி, அதன்பின்னர் உடலை இறந்தவரின் உறவினரிடம் கையளிக்கும்படி உத்தரவு பிறப்பித்தார். (எ-60)

## கவச...

விலில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள வீடொன்றின் வளவில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது, சந்தேகத்துக்குரிய பொருள் ஒன்றைக் கண்ட மக்கள், அது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அந்தப் பகுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்தியதுடன், வெடிபொருளை அகற்றுவதற்கான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த நிலக்கண்ணிவெடி போர் இடம்பெற்றகாலப்பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. (எ-159)

## ஆவா...

பொன்னாலை மேற்கில் பிறந்தநாள் நிகழ்வொன்றுக்குத் தயாராகிக் கொண்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களுக்குள் ஆவா என்ற அழைக்கப்படும் விநோதன் என்பவரும் உள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்துக்குரிய நடமாட்டத்தின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பொன்னாலை வீதி, துர்க்காமில் பகுதியில் ஆவா வாள்வெட்டுக் குழுவினர் ஒன்று கூடியுள்ளனர் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அந்தத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் வினோதன் என்பவர் இணுவிலைச் சேர்ந்தவர்கள் என்றும், ஏனைய 5 பேரும் கைதடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் 18 முதல் 20 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 12 பியர் ரின்கள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் மீது மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடுகள் எவையும் இல்லாத நிலையில், சந்தேநபர்களுக்கு ஏனைய பொலிஸ் நிலையங்களில் வழக்குகள், பிடியாணைகள் உள்ளனவா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## கூட்டமைப்பு...

திருகோணமலையில் நேற்று செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய நாடாளுமன்றக் குழு கூடியே ஊடகப் பேச்சாளரைத் தெரிவு செய்யும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய ஊடகப் பேச்சாளரை நீக்குவது பற்றி கூட்டமைப்பின் தலைமையால் எந்தத் தீர்மானமும் எடுக்க முடியாது. கூட்டமைப்பின் புதிய நாடாளுமன்றக் குழு கூடியே இந்தத் தீர்மானத்தை எடுக்கும்.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது புதிய ஊடகப் பேச்சாளர் தொடர்பில் கருத்துக்கள் மாத்திரம் சொல்லப்பட்டன. அந்தக் கூட்டத்தில் எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை.

கடந்த நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவில் 14 உறுப்பினர்கள் இருந்தார்கள். அதில் சிலர் இம்முறை நாடாளுமன்றத்துக்கு வரவில்லை. சிலர் புதிய உறுப்பினர்களாக வந்துள்ளார்கள். எனவே, புதிய நாடாளுமன்றக் குழு கூட வேண்டும். இதனைத் தொடர்ந்துதான் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றார். (எ-22)

## நேர்த்திக்...

ரும் நிலையில், காவடி உட்பட நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றுவதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

தற்போதுள்ள கொரோனா சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பிரதேச சபை, சுகாதாரப் பிரிவினர் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் இணைந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சந்நிதி முருகன் ஆலயத்தின் 10ஆவது திருவிழாவாக நேற்றுப் பூங்காவன திருவிழா நடைபெற்றது. நேற்றுப் பல இடங்களில் இருந்து பக்தர்கள் காவடி போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற ஆலயத்துக்கு வந்திருந்தினர்.

காவடிகள் ஆலயத்தின் வெளிவீதியில் வைத்து திருப்பி அனுப்பட்டன. தற்போதுள்ள சூழ்நிலையில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற முடியாது என்பதால் பக்தர்கள் அவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அதேவேளை, சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது.

ஆலயத்துக்கு வரும் அடியவர்கள், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, சமூக இடைவெளியை பேணுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றிலிருந்து அடியவர்களைப் பாதுகாக்கும் வகையில், இந்தக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில், வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகம் உற்சவ காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளது.

அடியவர்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தை எடுத்துவருதல் கட்டாயமானதாகும். இவை வீதித் தடைகளில் ஒவ்வொரு தடவையும் பதிவு செய்யப்படும். முகக்கவசங்களை அணிந்திருந்தல் கட்டாயமானதாகும். கட்டாய தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப் பட்டவர்கள், சுய தனிமைப் படுத்தப்பட்டவர்கள், தனிமைப்படுத்தலை நிறைவு செய்தமைக்கான ஆவணத்தை தம்வசம் வைத்திருக்க வேண்டும். காய்ச்சல், தடிமன், தும்மல், இருமல் உள்ளவர்கள் ஆலயத்துக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும்.

தாகசாந்தி, அன்னதானம் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. அங்கப்பிரதட்சணம், அடி அழித்தல், கற்பூர சட்டி எடுத்தல், காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருவிழாக் காலங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளின் போது 20 நபர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும் என்று, விசேட போக்குவரத்துச் சேவை இந்த முறை இடம்பெறமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ26)

## தேன்...

நபரே உயிரிழந்துள்ளார்.

கடந்த இரு நாள்களுக்கு முன்பாக காட்டுப் பகுதிக்குச் சென்ற இவர் வீடு திரும்பவில்லை. அதையடுத்து உறவினர்கள், நண்பர்கள் காட்டுப்பகுதியில் தேடுதல் நடத்தியுள்ளனர். அதன்போது கடுமையான காயங்களுடன் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக மடுப் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். தேன் எடுக்கச் சென்ற இவர் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கலாம் என்று கிராமத்தவர்கள் தெரிவித்தனர். (எ-110)

# தொடர்ச்சியான இழுத்தடிப்புகள் மூலம் அரசியல் அபிலாஷை நீர்த்துக்போகாது

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 28
தொடர்ச்சியான கால இழுத்தடிப்புக்கள் மூலம் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நீர்த்துப் போகச்செய்ய முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தனது நாடாளுமன்ற கன்னியுரையில் தெரிவித்தார். எமது மக்களின் அபிவிருத்தியும், அரசியல் தீர்வும் பொறுப்புக்கூறலும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை என்ற நிலையில் அபிவிருத்தியை மட்டும் காட்டி மற்றவையை மழுங்கடிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தின்போது நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில் இருந்தே நேர்மையான சமாதானம் பிறக்கும். எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கவேண்டுமெனில் இங்குள்ள அனைவரும் பிரச்சினை இருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் அடிப்படையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிலிருந்தே பிரச்சினையின் தீர்வுக்கான ஆரப்பப் படிகள் ஆரம்பமாகின்றன.

மாறாக பிரச்சினையின் மூலத்தையும் பிரச்சினையால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் அதற்கான நீதியான தீர்வு எது என்பற்றையும் மறைத்து, மறந்து வெறுமனே மேம்போக்கான நிலையில் பிரச்சினையை அணுகுவது ஒருபொழுதும் பிரச்சினைக்கான தீர்வினைக் கொண்டுவரப்போவதில்லை.

இதற்கு அப்பால் தார்மீக ரீதியிலும் சரி, தந்திரோபாய ரீதியிலும் சரி அது தவறான செயற்பாடாகும். அதனடிப்படையில் இலங்கைத் தீவில் தமிழர்களின் இருப்பை, அடையாளத்தை கேள்விக்கு உள்ளாக்குகின்ற இந்த இனப் பிரச்சினையின் மூலத்தையும் அதன் விளைவாக தமிழர்கள் மேல் இழைக்கப்பட்ட இனப் படுகொலைக்கான நீதி வழங்கலையும் ஏற்பதன் மூலமே இந்த நாட்டில் நிரந்தரமானதும் கௌரவமானதுமான சமாதானத்தை நாம் அடைய முடியும்.

மக்களிடம் இருந்து எழுகின்ற எதிர்பார்ப்புக்களின் அடிப்படையிலேதான் அபிவிருத்தி என்பது மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவே உண்மையான அபிவிருத்தியாக அமையும். எமது மக்களின் அபிவிருத்தியும், அரசியல் தீர்வும் பொறுப்புக் கூறலும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. எனினும் ஒன்றை மற்றொன்று பிரதீயீடு செய்ய முடியாது. தொடர்ச்சியான கால இழுத்தடிப்புக்கள் மூலம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நீர்த்துப் போகச்செய்ய முடியாது என்பதனை எமது மக்கள் அவ்வப்போது நிரூபித்து வந்துள்ளார்கள்.

மேற்சொன்ன விடயங்களின் அடிப்படையிலே அபிவிருத்தியை மட்டும் முன்னிறுத்தி ஏனையவற்றை மழுங்கடிக்கலாம் என்ற பிழையான அணுகுமுறையை எமது மக்கள் நிராகரித்து வந்துள்ளார்கள். மீண்டும் மீண்டும் ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் எமது மக்கள் வழங்கிய தீர்ப்புக்களின் ஊடாக பொறுப்புக்கூறலும் இனப்பிரச்சினைக்கான தீர்வும் வெவ்வேறாக அணுகப்பட வேண்டும் என்பதனை மக்கள் வெளிப்படுத்தி வந்துள்ளார்கள்' - என்றார். (ம)

IMMEDIATE VACANCIES




Requirements:
- Proven graphic designing experience
  A strong portfolio of Corel draw other graphics
- Familiarity with design software and technologies (such as Corel Draw, In Design, Illustrator, Dreamweaver)
- Excellent communication skills
- Ability to work methodically and meet deadlines

Selected candidates will be given an attractive salary above the industry norm.
If interested, please forward a detailed CV, including names and contacts of two non-related references to reach us, immediately to the following email address.

Email id : documt20@gmail.com

கணக்காளர், எரிபொருள் நிரப்புனர் தேவை

A.M.T. எரிபொருள் நிரப்பு நிலையம் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்துக்கு கணக்காளர்கள் தேவைப்படுகின்றனர். வயதெல்லை 25 தொடக்கம் 45 வயதுக்கிடைப்பட்டோர் விரும்பத்தக்கது. கணக்கீட்டு அலகு Quick Book தொடர்பான முன்னனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். எரிபொருள் நிரப்புனர்களும் தேவைப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு :
பார்த்தீபன் -077 312 7550
E-mail: vathanu.kokul@yahoo.com

## பல்கலை. பாதுகாப்பு ஊழியர் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 28
தங்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதைக் கண்டித்து யாழ்ப்பாணம் பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் நேற்றுமுன்தினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

இந்தப் போராட்டம் தொடர்பில் பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்ததாவது

கொறோனா தொற்றுக் காலத்தில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றியிருந்தோம். எம்மீது அபாண்டமான, ஆதாரமற்ற குற்றச்சாட்டை பல்கலைக் கழக ஊழியர் சங்கம் சுமத்தியுள்ளது. அதைக் கண்டித்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஊழியர் சங்கத்தால் கூறப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும். அல்லாவிட்டால் மன்னிப்புக் கேட்க வேண்டும். தனிநபர் பிரச்சினைகளுக்குச் சுயாதீன விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என்றனர். (எ)

## தென்மராட்சி பிறீமியர் லீக் சனிக்கிழமையன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 28
உதயன் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் 12 அணிகளின் பங்குபற்றலுடன் தென்னமராட்சி பிறீமியர் லீக் நாளையதினம் கோலாகலமான முறையில் ஆரம்பமாகின்றது.

மட்டுவில் கண்ணகை விளையாட்டு மைதானத்தில் நாளை காலை 8.30 மணியளவில் இந்தத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. ஒவ்வொரு அணியிலும் தலா 15 வீரர்கள் இருக்கும் வகையில் அணி கட்டமைக்கப்பட்டுள்ளது.

தொடரில் கிண்ணம் வெல்லும் அணிக்கு 2 லட்சம் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளது. இறுதியாட்டத்தில் தோல்வியடையும் அணிக்கு (இரண்டாவது இடம் பெறும் அணிக்கு) ஒரு லட்சம் ரூபா பரிசாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

போட்டிப்பரீட்சை வகுப்புகள்
- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (MSO)
- புகையிரதநிலைய அதிபர்
- Central Central bank M.A
- இறைவரி சேவை பதிவாளர் சேவை
- சட்டமாணி நுழைவு

சனி, ஞாயிறு
9.30am
சகல பரீட்சைக்கான சகல விடயங்களும்
த.தவசேகர் வழிகாட்டலில்
T.P-0766883394
யாழ்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் BOC atm எதிரில்)

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

A/L 2020 தொழில்நுட்ப பிரிவு
மாபெரும் விசேட செயலமர்வு

காலை 8 - மதியம் 2.30

| திகதி | பாடங்கள் |
| --- | --- |
| 7-9,12-15, 25-27 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 10-14,26-27 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 18-21 | I.C.T, விவசாய விஞ்ஞானம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம்(7),சித்திரம் |

07.09.2020 முதல்

ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)

மாவட்ட முதல்நிலை பெற்ற மாணவர்கள்

2019
| | |
| --- | --- |
| மதுசாளினி | (Kili) 01(BT) |
| யோகதீபன் | (JAF) 01(BT) |
| யசிதா | (MULLAI) 01(BT) |
| அருள்ராஜ் | (MAN) 01(ET) |
| தனுஜன் | (MULLAI) 02(BT) |
| தர்சன் | (KILI) 02(BT) |
| ஜீவரதன் | (MULLAI) 02(ET) |
| பிரியங்கன் | (KILI) 02(ET) |
| தக்சயன் | (MULLAI) 03(ET) |
| நிலவன் | (KILI) 03(BT) |
| ஜந்துசன் | (JAF) 03(ET) |
| லாவண்ஜா | (JAF) 04(BT) |

2018
| | |
| --- | --- |
| கலக்சிகா | (JAF) 01(BT) |
| ரஜிதா | (MULLAI) 01(BT) |
| விதுர்சன் | (KILI) 01(BT) |

2017
| | |
| --- | --- |
| கேசனா | 01(BT) |
| தமிழின்யன் | 01(ET) |
| மேரிகனிஸ்ரா | 02(BT) |
| சரண்சனா | 03(BT) |
| கோகுலன் | 03(ET) |

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.